
# ஸ்ரீ ஆதி சங்கரரும்

## ஸ்ரீ காமகோடி பீடமும்



Price: Rs. 5/-

உ

குருவே துணை

# ஸ்ரீ ஆதிசங்கரரும் ஸ்ரீ காமகோடி பீடமும்



திருவருள் திருப்பணி பதிப்பக வெளியீடு

26, ராஜ வீதி, காஞ்சிபுரம்.

காஞ்சி

கந்தன் அச்சுக்கூடத்தில் பதிப்பித்தது

1988

### நான்முகம்

# ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யர்

இப்பூவுலகின் பெரும்பாலான பகுதிகளில், மானிடப் பிறவி எய்திய பெரியோர்களால் போதிக்கப்பட்ட சமயங்கள் தோன்றும் முன்னர், வேதமதத்தினை ஆதாரமாகக் கொண்ட பண்பாடே பரவியிருந்தது எனும் உண்மையை இன்றும் ஐரோப்பா, அமெரிக்கா, மத்ய கீழ்த்திசை நாடுகள், தூரத்திய கீழ்த்திசை நாடுகள், ஆகியவற்றில் காணக்கிடைக்கும் பல சான்றுகளைக் கொண்டு அறியமுடியும்.

வேதமதப் பண்பாட்டின் ஆதாரமான வேதங்களின் உண்மையறிவூட்டும் தலையாய பகுதிகள் உபநிடதங்கள். அவைகளில் உள்ள பல கருத்துகளை ஸூத்ரங்களாக வடித்துக் கொடுத்தவர், மஹாபாரதம், பதினெண் புராணங்களை இயற்றிய வியாஸமுனிவர். அவை ப்ரஹ்ம ஸூத்ரங்கள் எனப்படும். அந்த ஸூத்ரங்களுக்கு, தெளிவான முறையில், வேதக்கருததுகளை ஒட்டி விரிவுரை எழுதியவர் ஸ்ரீ சங்கராசார்யர். இத்துடன் முக்ய உபநிடதங்களுக்கும், பாரதப் போர்க்களத்தில் மதிமயங்கி நின்ற அர்ஜுனனுக்கு, பகவான் கிருஷ்ணன் உபதேசித்த தேன் மொழிகளாம் பகவத் கீதைக்கும் விரிவுரைகளும், மற்றும் பல உரைகளையும், தோத்திரங்களையும் இயற்றியவர் ஸ்ரீ சங்கராசார்யர்.

பாரத நாட்டில் மறை வழிக்குப் புறம்பான சில கொள்கைகள் பரவிய ஸமயத்தில், பரம்பொருளான பரமேச்வரனே வேதநெறி தழைத்தோங்க, நாட்டின் தென் மேற்குக்கோடியில் கேரளப்பகுதியில் சங்கராசார்யராக அவதரித்தார். எட்டு வயதில் வேதங்களைக் கற்று, 12 வயதில் சாஸ்திரங்களைப் பயின்று முடித்து, 16-ஆம் ஆண்டில் விரிவுரைகளை இயற்றி முடித்து, 32-ஆம் பிராயத்தில் முக்திபெற்ற சங்கரர், பாரதபூமி முழுதும் நடந்தே சென்று அத்வைத தத்வத்தைப் பிரசாரம் செய்தார்.

உலக மக்களனைவரும், நன்மையும், மன அமைதியும், பேரின்பமும் அடைய உதவியவரும், சைவம், வைணவம், சாக்தம், ஸௌரம், காணபத்யம், காபாலிகம் (கௌமாரம்) என்ற அறுவகை பக்தி நெறிகளை வேத அடிப்படையில் நிறுவியவருமான சங்கரர் **ஜகத்குரு** எனப் போற்றப் படுகின்றார்

இன்றைக்கு 2000 ஆண்டுகளுககு முன் காலடியில் அவதரித்து ஆயிரக்கணக்கான சிஷ்யர்களுடன் பாரதபூமி முழுதும் பாதயாத்திரையாகச் சென்று அத்வைதத்தைப் போதித்த ஸ்ரீ சங்கரர், பாரததேசத்தின் நான்கு திக்குகளிலும் முக்கிய சிஷ்யமடங்களை நிறுவி, அவர்கள் மூலமாக அங்குள்ளவர்களுக்கு அத்வைத தத்வத்தைப் போதிக்க ஏற்பாடு செய்து, இறுதியில் மோக்ஷபுரியான காஞ்சீ க்ஷேத்திரத்தில் ஸ்ரீ காமாக்ஷி தேவியின் முன்பு ஸ்ரீ சக்ரப்ரதிஷ்டை செய்து, ஸர்வக்ஞ பீடம் ஏறி, ஸ்ரீ காமாக்ஷியையும் ஸ்ரீ சந்த்ரமௌளீச் வரரையும் ஆராதனை செய்து கொண்டிருந்து, காஞ்சியிலேயே ஸித்தியடைந்தார்.


காஞ்சியில் ஸ்ரீ சங்கர பகவத்பாதர் இறுதியில் வஸித்து வந்த ஸ்தானமான காஞ்சி மடம் தொன்று தொட்டு பெருமை வாய்ந்து, இன்றும் அப்படியே, தொடர்ந்த பரம்பரை ஆசார்யர்களுடன் பிரகாசித்து வருகின்றது என்பது யாவரும் அறிந்ததே. ஸ்ரீ சங்கரா சார்யரைப்பற்றி பல விவரங்களைக் கொண்ட, ஏப்ரல் 21, 1988 தேதியிடப்பட்ட தினமணி செய்தித் தாளில் பிரசுரிக்கப்பட்ட தகவல்களில் பெரும்பாண்மையான வைகளை இச்சிறு நூலில் பிரசுரித்துள்ளோம். தினமணி நிர்வாஹிகளுக்கு எமது முழு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

காஞ்சிபுரம்
29-7-88

பதிப்பகத்தார்

---

குறிப்பு:- இச் சிறுநூலின் அனுபந்தமாக, 1913-ஆம் ஆண்டில், பம்பாய் வெங்கடேச்வர ஸ்டீம் அச்சகத்தினால் பிரசுரிக்கப்பட்ட சங்கரா சாரியரின் சாரீரக மீமாம்ஸா பாஷ்யத்திற்கு, மைசூர் அரண்மனை பரம்பரை வித்வானாகத் திகழ்ந்த, மஹாவித்வான் காசி சேஷ வேங்கடாசல சாஸ்திரி எழுதியுள்ள ஸம்ஸ்க்ருத முன்னுரையில் காணப்படும் ஏழு அத்வைத மடங்களின் ஸ்ரீமுக முத்திரைகளும், ஸ்ரீமுக பிருதாவளிகளும் அச்சிடப்பட்டுள்ளன.



காஞ்சிபுரத்தில் ஸ்ரீ காமாக்ஷி ஆலயத்தில் நித்யபூஜையில் உள்ள ஸ்ரீ சங்கரமூர்த்தி.

# ஸ்ரீ சங்கரரும் காலடியும்

கேரளப் பகுதியில் திருச்சிவப்பேரூர் ( திருச்சூர் ) என்ற புனிதப்பகுதிக்கு அருகாமையிலுள்ள காலடி என்ற சிற்றூரில் சங்கரர் அவதரித்தார் என்பதை யாவரும் அறிவர்.

ஆனால் காலடியில் குறிப்பாக எந்த குறிப்பிட்ட இடத்தில் அவர் பிறந்தார்? அவர் பிறந்த, அவரின் மூதாதையர் வாழ்ந்த இல்லம் அவ்வூரில் எவ்விடத்தில் அமைந்திருந்தது? என்பவை சென்ற நூற்றாண்டின் இறுதிவரை கேள்விக்குறிகளாகவே இருந்தன.

தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த நடுக்காவேரி கிராமத்தில் ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள் என்ற ஓர் அறிஞர் இருந்தார்.

காலடியில் சங்கரர் அவதரித்த இல்லமிருந்த இடத்தில் சங்கர ஜயந்தி உத்ஸவம் கொண்டாடவேண்டும் என்று அவர் விரும்பினார். ஆதலால் அவர் சில ஆண்டுகளில் தொடர்ந்து காலடி சென்று, சங்கரர் அவதரித்த இடத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அதில் வெற்றிகண்ட சாஸ்திரியார் தமது குருபீடமான காமகோடி பீடத்தின் அக்கால ஆசார்யரிடம் சென்று, (சென்ற நூற்றாண்டின் இறுதியில் ), காலடியில் சங்கரர் அவதரித்த இடத்தை வாங்கி, அங்கு சங்கராசார்யருக்குக் கோயில் கட்டி, ஆசார்ய பிரதிஷ்டை செய்து, கும்பாபிஷேகம் நடத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். அக்காலத்தில் காமகோடி பீடத்து ஆசார்யர் சிறுவயதினராக இருந்ததாலும், அம்மடத்தின் பொருளாதார நிலையாலும், மடத்தின் அதிகாரிகளால் சாஸ்திரிகளின் மேலான எண்ணத்தைப் பூர்த்திசெய்ய முடியாமல் போய்விட்டது.

பின்னர் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் சிருங்கேரி மடத்ததிபர் ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதி ஸ்வாமிகளிடம் தம் அதிசயக் கண்டுபிடிப்பையும், காலடியில் சங்கராவதாரத் தலத்தில் செய்விக்க வேண்டிய கார்யங்களையும் தெரிவித்தார். 1905–ஆம் ஆண்டில் திருவாங்கூர் ராஜா ஸ்ரீ ராம வர்மா மூலம் திருநாள், திவான் மாதவராவ் ஆகியோரின் உதவியினால், 'மஞ்ஜப்பர புரோவர்த்தி' என்ற ஆல்வாய் நதிக்கரையில், காலடியிலுள்ள பகுதியில், சிறு நிலப்பகுதியும், பத்தாயிரம் ரூபாய் ராஜாவினால் கொடுக்கப்பட்ட நன்கொடையும் பெறப்பட்டன. அப்பகுதியில் அடர்த்தியாயிருந்த மரஞ் செடிகளெல்லாம் நீக்கப்பட்டு, இரு சிறு கோவில்களும் கட்டப்பட்டன. பின்னர் 1910–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21–ஆம் நாள் ஸ்ரீ சிவாபிநவ நரஸிம்ம பாரதி ஸ்வாமிகள், ஆலயங்களுக்குக் கும்பாபிஷேகம் செய்வித்தார். கும்பாபிஷேக விவரங்களை அறிவிக்கும் வகையில் ஆசார்ய சங்கரரின் கோயிலுக்கருகில் அமைக்கப்பட்ட சாரதாம்பாளின் ஆலயச் சுவரில் ஒரு சிலாசாஸனம் பொறிக்கப்பட்டது. இந்த சாஸனம், சற்றேறக்குறைய இன்றைக்கு 20 ஆண்டுகளுக்கு முன்னர் வரை காலடியில் பார்வையிலிருந்தது. இப்பால் காணவில்லையாயினும், 1966–ஆம் ஆண்டு காலஞ்சென்ற கே. ஏர். வெங்கடராமனால் தொகுக்கப்பட்டு, பாலக்காடு பி. எஸ். நாராயணனால் பிரசுரம் செய்யப்பட்ட, தற்காலத்திய சிருங்கேரி ஆசார்யாளின் ஸ்ரீ முகத்துடன் கூடிய, 'காலடி' என்ற நூலின், ஸம்ஸ்க்ருதப் பகுதியின் முதல் இரண்டு பக்கங்களில், இந்த சிலாசாஸனத்தில் பொறிக்கப்பட்ட 18 ஸம்ஸ்க்ருத சுலோகங்களும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் முதல் சுலோகமும், இரண்டாவதும் பின்வருமாறு உள்ளன :-



"ப்ராயசோ வர்ஷஸாஹஸ்ரத்விதயாத்
ப்ராக் ஸதாசிவ :,
த்ருஷ்ட்வா அதர்மேண தர்மஸ்ய
க்லானிம் ஸர்வத்ர பூதலே – 1

காலட்யாம் கேரளே
ஸ்ரீமச்சங்கராசார்ய ஸம்க்ஞயா,
ப்ராப்ய ஜன்ம ஸ்வப்ரதிக்ஞா–
பாலனார்த்தமிவாதராத் – 2

[ பொருள் :– சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர், ஸதாசிவன், உலகில் அதர்மத்தினால் தர்மத்திற்கு ஏற்படும் பலவீனத்தைப் பார்த்து, தமது ப்ரதிக்ஞையைக் கடைபிடிக்கும் வகையில், கேரளத்தில், காலடியில் சங்கராசார்யராக பிறவியெய்தி ].

இக்கல்வெட்டுச் செய்யுட்களின்படி சங்கரரின் அவதாரகாலம் கி. மு. முதல் நூற்றாண்டில் என்பது சிருங்கேரி மடத்தின் பூர்வாசார்யர்களின் அபிப்ராயம் என்பது தெளிவு.

காலடியில் 1910-இல் நடந்த கும்பாபிஷேகத்திற்கு, கும்பகோணத்திலிருந்த காமகோடி பீடத்திற்கு அழைப்பு அனுப்பப்பட்டது. அப்பீடத்தின் பிரதிநிதிகளாகக் கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்ட இருவருக்கு, சிருங்கேரி மடத்தினரால் விசேஷ மரியாதைகள் செய்யப்பட்டன. நடுக்காவேரி ஸ்ரீநிவாஸ சாஸ்திரி, தாம் காலடியில் சங்கரர் அவதரித்த தலத்தைக் கண்டுபிடித்த பெருமையை "ஸ்ரீ ஜகத்குரு தாம ஸேவாசதகம்" என்று 100 ஸம்ஸ்க்ருத சுலோகங்களில் எழுதினார். அந்த சுலோகங்களும், மேற்சொல்லப்பட்ட "காலடி" என்ற நூலில் இடம் பெற்றுள்ளன.

குறிப்பு :- சங்கரரின் தாயான ஆர்யாம்பாளின் பிறப்பிடம் மேல் பாலூர் மனா. மேல் பாலூர் எர்ணா குளத்திற்குச் சுமார் 20 மைல் தென்கிழக்கிலுள்ளது. சங்கரரின் தகப்பனாரும், மூதாதையரும் வாழ்ந்ததும், சங்கரர் பிறந்ததும் காலடியில் கைப்பிள்ளி வீடு. காலடியில் சங்கரருக்கு கோயில் எழுப்பப்பட்டுள்ள இடம். காலடியில் ஆர்யாம்பாளின் பூத உடலுக்கு ஸம்ஸ்காரம் செய்யப்பட்டது தூர்ணா (ஆல்வாய்) நதிக்கரையில், தெற்கே மடத்தின் சுவாதீனத்திலிருந்த மஞ்ஜப்பர புரோவர்த்தி என்ற இடத்தில்தான்.

—:o:—

## ஸ்ரீ சங்கராசார்யரும் காசி க்ஷேத்ரமும்

வரணா, அஸி எனும் இரண்டு சிறு நதிகளுக்கு இடையே, கங்கை நதியின் கரையில் அமைந்துள்ள வாராணஸி என்ற நம் நாட்டின் தலையாய புனிதத் தலத்திற்குக் காசி என்பது மற்றொரு பெயர். சங்கராசார்யர் காசி க்ஷேத்திரத்தில் தங்கியிருந்தக்கால் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகள் சிலவற்றை இங்கு காண்போம்.

வயோதிக அந்தணரின் வேடம் பூண்டு வியாஸ முனிவர், சங்கரர் இயற்றிய ப்ரஹ்ம ஸூத்ரபாஷ்யத்தில், சங்கரரைப் பரீக்ஷித்தார். தக்க விடைகளைக் கூறிய சங்கரரை மெச்சி, தம் சுய உருவில் தோன்றி வியாஸர் அவரை ஆசீர்வதித்துச் சென்றார். ஒரு நாள் நண்பகலில் கங்கைக்கு நீராடச் சென்ற சங்கரரின் முன், சண்டாள வேடத்தில் தோன்றிய, ஸ்ரீ விச்வேச்வரர் சங்கரரின் அத்வைத மனப்பான்மையைப் பரீட்சிக்கலானார். பல கேள்விகளை வீசிய சண்டாள உருவம் தாங்கிய பரம்பொருளை, இறுதியில் சங்கரர் உயர்ந்த வேதாந்தக் கருத்துக்களைக்கொண்ட ஐந்து செய்யுள்களைப் பாடி, மகிழ்வித்தார். ஈசன் தனது உண்மை வடிவில் சங்கரருக்குக் காட்சியளித்து மறைந்தார். சங்கரர் இயற்றிய ஐந்து செய்யுள்களுக்கு 'மனீஷா பஞ்சகம்' எனப் பெயர் வழங்கப்படுகின்றது.



சங்கராசார்யரின் வரலாறு கூறும் வேறு எந்த நூல்களிலும் காணப்படாத, அவருடைய காசி க்ஷேத்ர வாஸ காலத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சியொன்றை 'குருவம்ச காவ்யம்' என்ற நூல் கூறுகின்றது. இக் காப்பியம் ஸ்ரீ ஸச்சிதானந்த பாரதீ (1706-1741) என்ற முன்னாள் சிருங்கேரி மடாதிபரின் விருப்பப்படி, காசி லக்ஷ்மண சாஸ்திரியால் சுமார் கி. பி. 1735-இல் இயற்றப்பட்டதாம். இதில் மூன்றும் ஸர்க்கத்தின் 23-வது செய்யுள் பின் வருமாறு:-

"வாராணஸீம் யோகிவரோதிகம்ய
புஜைரிவ ஸ்ரீஹரி ரேஷசிஷ்யை: |
ஸஹாத்மனா பஞ்ச மடான யீஷாம்
ப்ரகல்ப்ய தஸ்த்தௌ கதிசித் திநானி ||"

இக்காப்பியத்தின் முதற் பதிப்பில், காப்பிய ஆசிரியரே இயற்றியுள்ள உரையில், "ஆசார்யர் காசியை அடைந்த பின், பத்மபாதர் முதலிய நான்கு சிஷ்யர்களுக்காக நான்கு மடங்களையும், தனக்கென ஒன்றும், ஆக ஐந்து மடங்களை ஏற்படுத்திச் சில தினங்கள் அங்கு இருந்தார்" என்று, மேற்கண்ட செய்யுளுக்குப் பொருள் சொல்லப்பட்டுள்ளது. பின்னருள்ள செய்யுள்களில், சங்கரர் சீடர்களுடன் தொடர்ந்து யாத்திரை செய்த விவரங்கள் காணப்படுகின்றன. சில தினங்கள் காசியில் தங்கியிருக்க மடங்களை நிறுவுவதன் அவசியம் யாது? அத்தினங்களில் சிஷ்யர்கள் குருவிடமிருந்து பிரிந்து இருந்தார்களா? இதுபோன்ற பிரச்சினைகள் எழுகின்றன.

## ஸங்கல்பம்

பாகவத புராணத்தில், பத்தாவது ஸ்கந்தம், மூன்ரும் அத்தியாயம், 10, 11-ஆம் சுலோகங்களே உதாரணமாகக் கொண்டு, குருவம்ச காவ்யத்தில் காணப் படும் மேற்சொன்ன செய்யுளுக்குப் பொருள் காணலாம் எனச் சில அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். குறிப்பிடப்பட்ட பாகவத சுலோகங்கள், கம்ஸ மன்னனின் சிறைச் சாலையில் வஸுதேவரும் அவரது மனேவி தேவகியும் அடைத்து வைக்கப்பட்டிருந்தபோது, தேவகி கிருஷ்ணனைப் பெற்றனள் என்பதையும், கிருஷ்ணனின் ஜனனத்தை மனத்திற்கொண்டு, வஸு தேவர் ஆயிரக்கணக்கான பசுக்களே ஸந்தோஷத்துடன் அந்தணர்களுக்குத் தானம் செய்தார் என்றும் தெரிவிக் கின்றன. நள்ளிரவில் சிறையில் குழந்தை பிறந்தபோது, காவலில் வைக்கப்பட்டிருந்த வஸுதேவர் எப்படி பல பசுக்களே தானம் செய்திருக்கமுடியும்? இதைச் சிந்தித்துப் பார்த்து, பாகவத புராணத்திற்கு உரை செய்துள்ள, ஸ்ரீதரஸ்வாமி முதலிய ஏழு உரையாசிரியர்களும் ஒரு முகமாக “ வஸுதேவர் மகன் பிறந்த ஸமயத்தில், அந்தணர்களுக்கு, பின்னர் சௌகரியமான காலத்தில், ஆயிரக்கணக்கில் பசுக்களேத் தானம் செய்யவேண்டு மென மனதில் ஸங்கல்பம் செய்துகொண்டார் ”, என மேற் சொல்லப்பட்ட இரு பாகவதச் செய்யுள்களுக்குப் பொருள் கூறியுள்ளனர் என்பது நோக்கற்பாலது. இந்த முறையில், குருவம்ச காவ்யத்தின் செய்யுளுக்குப் பொருள், பாரத நாட்டின் மாபுண்யப் பதியான காசி க்ஷேத்திரத்தை அடைந்த சங்கராச்சார்யர், பாரதநாட்டின் நலம் கருதி, நாடு முழுவதிலும் நம் வேத தர்மமும், அத்வைத வேதாந்தமும் பிற்காலத்தில் தழைத்தோங்கு வதன் பொருட்டு, ஐந்து மடங்களே நிறுவ வேண்டும் என மனதில் ஸங்கல்பம் செய்து கொண்டார் என்பதாகும்.



இன்றும் காசியில் ஸுமேரு மடம் என்றும், பாதுகா மடம் எனவும் பெயர் கொண்ட ஓர் அத்வைத மடமுளது. இதில் வங்காளி ஸன்யாஸிகள் பரம்பரையாக அதிபர் களாக இருந்து வருகின்றனர். சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர், இம்மடத்தைப் பழுதுபார்ப்பதற்காகப் பொருள் வேண்டி, ஒரு விண்ணப்பம் அச்சிடப்பட்டு வெளியிடப் பட்டது. அதில் அக்காலத்தில் காசியில் வாழ்ந்த பிற மடாதிபதிகள், காசி விச்வேச்வரர், அன்னபூர்ணு தேவி கோயில்களின் மஹந்துகள், மஹாமஹோபாத்யாய விருது பெற்ற வித்வான்கள், பிற அறிஞர்கள், சில ஜமீந்தார்கள், காசி மஹாராஜாவின் காரியதரிசி முதலியோர் கையெழுத் திட்டுள்ளனர். இந்த வெண்டுகோளில், “ இம் மடத்தை, காசியில் ஜகத்குரு ஸ்ரீஆதிசங்கர பகவத்பாதர் தங்கியிருந்த போது ஸ்தாபித்தார் ” எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது.

——:o:——

## ஸ்ரீ சங்கராசார்யரும் காஷ்மீரும்

ஸ்ரீ சங்கராச்சார்யர், தமது திக்விஜய யாத்தி ரையில், காஷ்மீரத்திற்கு விஜயம் செய்தது அன்னாரின் சரித்திரத்தைக் கூறும் சில நூல்களில் குறிப்பிடப்பட்டு உள்ளது. இந்த விஜயத்தின் ஞாபகார்த்தமாக காஷ்மீர ராஜ்யத்தின் தலைநகரான ஸ்ரீநகரத்தின் மிக அருகில் சங்கராச்சார்ய என்ற குன்றின் மீது சங்கராச்சார்யரின் புராதனக் கோயில் ஒன்று இன்றும் காட்சியளிக்கின்றது.

குவாஷாலால் என்பவர் இயற்றிய ‘காஷ்மீரின் சுருக்கமான சரித்திரம்’ ( A Short History of Kashmir) என்ற ஆங்கில நூலில், “ இக்கோயிலை (சங்கராச்சார்யர் கோயிலை ), காஷ்மீர அரசன் கோபாதித்யன், கி. மு: 367-366இல் கட்டினுன் ” எனச் சொல்லப்பட்டுள்ளது.

'காஷ்மீரில் யாத்திரைகள்' ( Pilgrimages in Kashmir ) என்ற தலையங்கத்தின் கீழ், 17—7—1949 தேதியிடப்பட்ட சென்னை 'ஹிந்து' செய்தித் தாளில் (பக்கம்-15, பத்தி-2 ) ஆங்கிலத்தில் எழுதப்பட்டுப் பிரசுரமாகியிருந்த விமரிசனத்தின் தமிழாக்கம் :

" சங்கராச்சார்ய "

"இக்கோயில் ஸ்ரீநகரில் அமைந்துள்ளது. இது பள்ளத்தாக்கிலிருந்து 1000 அடிக்கு மேலுள்ள தக்தி சுலைமான் என்ற குன்றின் சிகரத்தின் மேலமைந்துள்ள ஒரு பண்டைக் கோயில். குன்றும் கோயிலும், திருவாங்கூரிலிருந்து காஷ்மீரத்திற்கு வந்த தென்னிந்திய அத்வைத குரு சங்கராச்சார்யரின் பெயரைக் கொண்டு உள்ளன. கி. மு. 368 முதல் 308 வரை காஷ்மீரை ஆண்ட, கோபாதித்யன் இக்கோயிலைக் கட்டினான். பின்னர், தாராள மனப்பான்மையுடைய ஸியின்-உல்-அப்தீன் என்ற முஸ்லீம் அரசன் இக்கோயிலைப் பழுது பார்த்தனன் ".

தொல்பொருள் ஆராய்ச்சியர்களான கன்னிங்ஹாமும் குரோலும் (Cunningham and Crole) ஓர் அறிக்கையில், "காஷ்மீரத்திலுள்ள சங்கராச்சார்யரின் கோயில், பௌத்த மதத்தைத் தழுவிய அசோகன் என்ற மன்னனின் மகனை ஜாலுகன் எனும் சிவபக்தனால், சுமார் கி. மு. 220ஆம் ஆண்டில் கட்டப்பட்டது" எனக் குறிப்பிட்டு உள்ளனர்.

சரித்திர ஆதாரமாக மதிக்கப்படும் கல்ஹணன் இயற்றிய " ராஜதரங்கிணீ " என்ற ஸம்ஸ்க்ருதக் காப்பியத்தில், மேலே குறிப்பிடப்பட்ட கோபாதித்யன், அசோகன், ஜாலுகன் ஆகிய மன்னர்களின் வரலாறு சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது.



மேற்கண்ட நால்வகைத் தகவல்களிலிருந்து, சங்கரரின் காஷ்மீர விஜயத்தின் நினைவாக, அங்கு ஒரு கோயில், கிறிஸ்து சகாப்தம் ஆரம்பிப்பதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே எழுப்பப்பட்டது தெளிவாகின்றது.

——: o :——

## ஸ்ரீ சங்கராசார்யரும் நேபாள தேசமும்

நேபாள நாட்டின் அரச பரம்பரைகளைப் பற்றிய நூல்களையும், சாஸனங்களையும் ஆராய்ந்து, 'நேபாள ராஜ வம்சாவளி' ( Chronology of Nepal History-Reconstructed ) என்ற ஓர் ஆங்கில நூல், ஆந்திர அறிவாளி, கோடா வெங்கடாசலமென்பவரால் 1953ல் இயற்றப்பட்டுள்ளது. இவர் பிற்காலத்தில் ஓர் அத்வைத பீடத்தின் அதிபதியாகத் திகழ்ந்தவர். இந்த நூலில் ஆதிசங்கரரைப் பற்றிக் காணப்படும் தகவல்களுள், "சங்கரர், நேபாள நாட்டின் ஸூர்ய வம்ச மன்னர்களுள் ஒருவரான வ்ருஷதேவ வர்மனின் காலத்தில் ( கி. மு. 547-486 ), கி. மு. 487ஆம் ஆண்டில் நேபாளத்திற்கு விஜயம் செய்ததும், அம்மன்னன் தன் மகனுக்குச் சங்கராச்சார்யரின் பெயரையொட்டி 'சங்கரதேவன்' எனப் பெயர் சூட்டிய விவரமும் இடம் பெற்றுள்ளன.

சங்கரரின் வரலாற்றைக் கூறும் ஸம்ஸ்க்ருத நூல்களில் ஒன்று 'மார்க்கண்டேய ஸம்ஹிதை'. இதன் 72ம் காண்டம், ஏழாம் அத்தியாயத்திற்கு ( பரிஸ்பந்தத்திற்கு ) 'சங்கர சரிதம்' எனத் தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ( மைஸூர் பல்கலைக்கழக, ஓரியண்டல் ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட் சுவடிகளின் பெயர்த் தொகுப்பு VI-(1981) பக்கம் 191-18179 நம்பரில் காண்க ). அந்த சங்கர சரிதத்தில், சங்கரர் நேபாள நாட்டின் மேற்குக் கோடிக்குச்

சிறிது வடக்கேயுள்ள கைலாஸத்திற்குச் சென்று, அங்கு பரமசிவனிடமிருந்து ஐந்து ஸ்படிக லிங்கங்களைப் பெற்று, அவைகளுள் ஒன்ருன வரலிங்கத்தை, நேபாளத்திலுள்ள நீலகண்ட க்ஷேத்திரத்தில் வைத்து, அதன் பூஜைக்கு ஏற்பாடு செய்த தகவல் காணப்படுகின்றது. இவ்விவரம் ஆனந்தகிரி சங்கர விஜயத்திலும் உள்ளது.

——:o:——

## ஸ்ரீ சங்கராசார்யரும், கூடலி - சிருங்கேரியும்

கர்நாடகப் பிரதேசத்தில் கடூர் மாவட்டத்தில், சிருங்கேரி ( ச்ருங்ககிரி ) என ஒரு சாந்தமான இடம் துங்கை நதிக்கரையில் உள்ளது. இதற்கு ரிச்யச்ருங் காச்ரமம், ச்ருங்கபுரம், சிருங்ககிரி ( மருவி சிருங்கேரி ) என்ற பெயர்கள் உள. ரிஷ்யச்ருங்காச்ரமம் எனச் சூட்டப் பட்ட பெயருக்கு, ரிஷ்யச்ருங்கர் என்ற இதிகாசப் புகழ் பெற்ற கலைக்கோட்டு முனிவரின் ஆச்ரமம் இங்கு உள்ளது எனக்காரணம் காட்டப்படுகின்றது. வால்மீகி யின் இராமாயண இதிஹாஸத்தின் பாலகாண்டம்– ஒன்பதாம் ஸர்கம் 7, 8, 12, 13 சுலோகங்கள், பத்தாம் ஸர்கம்–33, 34 சுலோகங்கள், பதினொன்றாம் ஸர்க்கம் 4, 8, 14, 15 சுலோகங்கள் ஆகியவற்றில், அயோத்தி மன்னன் தசரதன், ரோமபாதன் என்ற அங்கதேச மன்ன னிடம் அவன் அருகிலுள்ள ரிஷ்யச்ருங்க முனிவரை, தமது புத்ரகாமேஷ்டி வேள்விக்கு அனுப்பித் தரும்படி, வசிஷ்ட முனிவரின் விருப்பப்படி, பிரார்த்தித்ததும், பிற விவரங்களும் கிடைக்கின்றன. நம் நாட்டு மற்றொரு இதிஹாஸமான மஹாபாரதத்தின் ஆரண்ய காண்டத்து தீர்த்த யாத்திரைப் பகுதியின் 87, 88, 89ஆம் அத்தியா யங்களில் ரிஷ்யச்ருங்க முனிவரின் கதை விவரிக்கப் பட்டுள்ளது. 87–ஆம் அத்தியாயத்திலுள்ள 23ஆவது



செய்யுள் கௌசிகி நதிக்கரையிலுள்ள காச்யபாச்ரமத்தில் தவசியான ரிஷ்யச்ருங்கர் வசித்து வருகிறார் என்றும் அந்த அத்தியாயத்தின் 40ஆவது சுலோகத்தில் அங்க தேசத்தின் அரசன் ரோமபாதன் எனவும் காணப்படு கின்றது. எண்பத்தெட்டாம் அத்யாயத்தின் 10ஆம் சுலோகம் அங்க தேசத்தரசன் ரோமபாதன், ரிஷ்யச்ருங் கரைத் தம் அவைக்கு அழைத்து வரும்படி அனுப்பிய வேசியரை, அவர்களது இருப்பிடம் எங்குள்ளதென, முனிவர் கேட்பதாகப் பொருள் கொண்டுள்ளது. அடுத்துள்ள செய்யுளில் அப்பெண்மணிகளின் தலைவி, தனது ஆச்ரமம், எதிரே தென்படும் மலையின் மறு பக்கத்திலிருந்து மூன்று யோஜனை தூரத்திலுள்ளதாக பதில் கூறுகின்றனள். ( ஒரு யோஜனை என்பது 48000 அடி அல்லது சுமார் 9 மைல்கள் ). ஆதலால் விபண்ட கரின் புதல்வரான ரிஷ்யச்ருங்கரின் ஆச்ரமம், அங்க தேசத்தின் தலைநகரத்திலிருந்து 27 மைல் தூரத்திலிருந்த தெனப் புலப்படுகின்றது. இப்படியாக, தற்காலத்திய பீஹார், அஸாம் இராஜ்யங்களுக்கிடையில் அமைந்திருந்த பண்டை அங்கராஜ்யத்தின் தலைநகரின் அருகாமையில் தான் ரிஷ்யசருங்காச்ரமம் இருந்திருக்க வேண்டுமென இரு இதிஹாஸங்களில் குறிக்கப்பட்டுள்ளதற்கு மதிப்பு கொடுப்போமாக.

* * * *

## கல்வெட்டுச் சான்று

சிருங்கேரிமடத்திற்கு முதன் முதலாக விஜயநகரமன்னர் ஹரி ஹரனும் ( முதலாம் ஹரிஹரன் ) அவனது தம்பி யரும் நிலங்களாக மான்யம் கொடுத்ததை தெரிவிக்கும்

கல்வெட்டு ( EP C. VI. Sg. ) ஒன்றிற்கு 'ச்ருங்கபுரம்' சாஸனம் என்றுதான் பெயர் கூறப்படுகிறது. வித்யாரண்யருடன் காசியிலிருந்து, 'மலையாளப்ரஹ்மம்' என்றும், 'ச்ருங்கின்' என்றும் பெயர் கொண்ட அந்தணரின் சிலையும் ச்ருங்கேரியில் காணப்படுகின்றது. இந்த ச்ருங்கிக்கு விசேஷ காலங்களில் முதலில் ஆராதனம் நடப்பது, சிருங்கேரியில் மட்டுமல்லாது கூடலி, விருபாக்ஷம், புஷ்பகிரி முதலிய சில அத்வைத மடங்களிலும் ஆராதனை நடப்பது வழக்கிலுள்ளது. இதனால் 'ச்ருங்கி' என்ற பெயரை ஒட்டியே 'ச்ருங்கபுரம்' என்ற ஊர் பெயரும் ஏற்பட்டிருக்கக்கூடும் என ஊகிக்கலாம்.

* * * *

ஸ்ரீ சங்கரர் நாட்டின் நான்கு எல்லைக்கோடிகளிலும் மடங்களை நிறுவினார் என்ற விவரம், சங்கரபகவத்பாதரின் அர்ச்சனைக்கோவை (108), மற்றும் சில நூல்களிலிருந்தும் அறியப்படுகின்றது. இந்த நான்கு திக்குக் கோடிகளுக்கும் யட இந்தியராலும், கால் நடையாக யாத்திரை செய்யும் தசநாமி ஸன்யாஸிகளாலும் சொல்லப்படும் பெயர் 'சார்தாம்'. யாத்திரைக்குச் சார்தாம் யாத்திரை என்று பெயர். இந்த நான்கு மூலைகளாவன :- பதரீநாத், ஜகந்நாத் (புரீ), ராம்நாத் (ராமேச்வரம்), துவாரகாநாத் (துவாரகை). தென்மூலையான ராமேச்வரத்தில் சங்கராச்சார்யர் நிறுவிய மடத்தின் க்ஷேத்ரம் (இடம்) ராமேச்வரம் என்றே, சங்கரருக்குப் பிற்காலத்தில், அல்லது சில அறிஞர் ஊகிப்பதுபோல வித்யாரண்யரின் காலத்திற்குப் பின்னரோ ஏற்பட்ட, பரஸ்பர வேறுபாடுகளைக் கொண்ட 'மடாம்னாய ஸ்தோத்திரங்கள்' எல்லாவற்றிலும் (வாணிவிலாஸ் அச்சுக்கூடத்தினால் பிரசுரிக்கப்பட்ட ஒன்று நீங்கலாக) காணப்படுகிறது.



## சாரதை பிரதிஷ்டை வரலாறு

இப்படி நாட்டின் நான்கு எல்லை மூலைகளிலும் நான்கு மடங்கள் ஏற்படுத்திய சங்கரர், எதிர்பாராத சூழ்நிலையில், கர்நாடகப் பிரதேசத்தில் சாரதையைப் பிரதிஷ்டித்தது பற்றிய பாரம்பர்யத் தகவல், சில புத்தகங்களில் காணப்படுகிறது. பெங்களூரிலிருந்து தற்காலம் பிரசுரிக்கப்படும், 'ஜோதிட ஸஞ்சிகை' (Astiological Magazine) என்ற இதழின் ஆரம்ப ஆசிரியரான, காலஞ்சென்ற பி. ஸூர்யநாராயண ராவ் (எம். ஆர். ஏ. எஸ்.) இயற்றிய 'சிவகங்கை மடத்தின் சுருக்கமான வரலாறு' ( A short History of the Sivaganga Mutt ), 'விஜயநகர சரித்ரம்' ( History of Vijayanagar. The Never to be Forgotten Empire ) என்ற ஆங்கிலத்திலெழுதப்பட்ட இரு நூல்களிலும், துங்கை நதியும், பத்ரை நதியும் கூடுமிடத்தில் ( கூடலியில் ) மேற்கண்ட தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

அதாவது :- சங்கராச்சார்யர் மாஹிஷ்மதியிலிருந்த கர்மமீமாம்ஸாவாதியான மண்டனமிச்ரரை வாதில் வென்று, அவருக்கு ஸன்யாஸ தீக்ஷையளித்து, 'ஸுரேச்வரர்' என்ற பெயருமிட்டார். மண்டனமிச்ரரின் மனைவி ஸரஸவாணி ஸரஸ்வதியின் அவதாரமாகக் கொள்ளப்பட்டவள். அப்போது ஸரஸவாணி தம் நிரந்தர இருப்பிடமான பிரும்மலோகத்திற்குப் புறப்பட யத்தனித்தாள். சங்கரர் அவ்வம்மையை வனதுர்கா மந்திரத்தால் கட்டுப்படுத்தி, தம்முடன் வரும்படி வேண்டினார். அம்மையார், தாம் வருவதாகவும், ஆனால் யாத்திரை செய்யும் பொழுது, தான் பின்னே வருகிறாளா என அறிய, சங்கரர் பின் நோக்கிப்பார்க்கலாகாதென ஒரு கட்டுப்

பாட்டை விதித்து, திரும்பிப் பார்க்கின் அவ்விடத்திலேயே தான் நின்று விடுவதாகக் கூறினாள். சங்கரர் விதியைக் கடைப்பிடிப்பதாக வாக்களித்தார். தென்திசை நோக்கி யாத்திரை தொடங்கலாயிற்று. ஸரஸவாணியின் கால் சிலம்பின் சிறுமணிகளின் ஒலி கேட்ட வண்ணம் அம்மையார் பின்தொடர்ந்து வருவதை சங்கரர் அறிந்தவராக நடந்து வந்தார். துங்கையும் பத்திரை நதியும் கூடுமிடத்தை அடைந்தபோது, ஸரஸவாணியின் கால் சிலம்புகள் மணலில் சிக்குண்டதால், மணிகளின் ஓசை கேட்கவில்லை. ஸந்தேஷம் கொண்ட சங்கரர் திரும்பிப் பார்த்தார். ஸரஸவாணி அங்கேயே நின்று விட்டனள். ( இதுவரை நூல்களில் காணப்படும் பாரம்பர்யத் தகவல் ).

இப்படி இரு நதிகளின் கூடல் பகுதியில் நின்று விட்ட தேவீ ஸரஸ்வதியின் அம்சமான ஸரஸவாணியின் ஸாந்நித்தியத்தை அவ்விடத்திலேயே பிரதிஷ்டை செய்து, அந்த சாரதையின் பூஜைக்காக தமது சீடர்களுள் பிருத்வீதரரை நியமித்தார் சங்கரர். எனவே எதிர்பாராத நிலையில் அங்கு ஒரு நிறுவனம், தோன்றியது. இப்படி துங்கையும் பத்ரையும் கூடிய பின் துங்கபத்ரை எனப் பெயர் கொண்ட நதியின் கரையில் ஓர் இயற்கை வனப்புள்ள பகுதியில் வாணியான சாரதையை சங்கரர் பூஜித்தார் ( பிரதிஷ்டித்தார் ), என சிருங்கேரி ‘ குருவம் சகாவ்யம் ’ விளக்குகின்றது. ( மூன்றாம் ஸர்கம்-செய்யுள்-**31** ) :-

—— ; o ; ——



## மஹான் வித்யாரண்யர்

சங்கர பகவத்பாதருக்கடுத்தப்படியாக அத்வைத வேதாந்தத்தின் பிரசாரத்திலும், அதற்காகக் கிரந்தங்களை இயற்றியும், புதிய மடங்களை நிறுவியும் புகழடைந்தவர். 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றி, நூறாண்டுகளுக்கு மேல் வாழ்ந்து, கி. பி. **1386**இல் மறைந்த வித்யாரண்யர். இவர் காஞ்சி நகரத்தில் கி. பி. 1356-இல் புகழுடன் திகழ்ந்தது, பின்னர் துங்க பத்திரை நதிக்கரையிலுள்ள பம்பா க்ஷேத்திரத்திற்கு ( தற்கால ஹம்பிக்கு ) வந்து தவமியற்றிக் கொண்டு, மௌனியாக இருந்துகொண்டு, பக்தர்களை ரக்ஷித்து வந்தது, இவருக்கு உலகில் பூஜிக்கப்பட்ட சந்திரசேகர பாரதீ, நரஸிம்மபாரதீ என்று சீடர்கள் இருந்தது. அவர்களின் முன்னவரை வித்யாரண்யர் துங்கைக் கரையிலுள்ள சிருங்கேரியில் ஆசார்யராக நியமித்தது. விருபாக்ஷத்தில் அழகான ஒரு மடத்தை உருவாக்கி, அதன் முதலதிபராக நரஸிம்மபாரதீயை நியமித்தது. பின்னர் வித்யாரண்யர் எல்லா ஐச்வர்யங்கள், வாகனங்கள் ஆகியவற்றை விட்டு, காஞ்சியிலிருந்து ஸித்தியடைந்தது, போன்ற பல விவரங்கள் கொக்கண்ட்ரம், வேங்கடரத்னம் பந்துலு என்பார், சிருங்கேரி மடத்தின் ஏற்றம் பற்றி எழுதியுள்ள ‘சங்கரமட தத்வப்ரகாசிகார்த்த ஸங்க்ரஹம்’ என்ற தெலுங்கு லிபியில் பதிப்பிக்கப்பட்ட ( 1877 ) நூலில், மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்ட ‘ புஷ்பகிரி மடாம்னாய ஸ்தோத்திரம் ’ என்பதில் பல செய்யுட்களில் விவரமாகச் சொல்லப்பட்டுள்ளன. இப்படி எடுத்து எழுதப்பட்ட புஷ்பகிரி மடாம்னாய ஸ்தோத்திரத்தின் சுலோகங்களில் ஒன்று :-

" ததாரப்ய அப்வத் பீடத்வயம் வந்த்யம் புதைஸ் ஸதா ". ( பொருள் :- அது முதல் அறிஞர்கள் வணங்கத் தகும் இரு பீடங்கள் ஏற்பட்டன ).

இவ்விரு பீடங்கள், முன்னருள்ள சுலோகங்களில் (மேலே கொடுக்கப்பட்ட பொருள்களைக் கொண்ட சுலோகங்களில்) சொல்லப்பட்ட துங்கைக் கரையிலுள்ள சிருங்கேரி பீடம், துங்கபத்ரைக் கரையிலமைந்த விருபாக்ஷ பீடம் ஆகியவையாகும்.

வித்யாரண்யர் விஜயநகர ஸாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தபின்பு, தனது பூர்வாச்ரம உடன் பிறந்தான் ஸாயணர் போன்ற அறிஞர்களை வேதங்களுக்கு உரைகளியற்றும் பணியில் ஈடுபடுத்தி, தாமும் வேதாந்த க்ரந்தங்களையும், பிற சாஸ்த்ர நூல்களையும் இயற்றும் முயற்சியில் மனம் கொண்டார். இயற்கை வனப்பும், அமைதியும் சூழ்ந்த, துங்கக்கரையிலுள்ள சிருங்கேரியே தக்கயிடமெனத் தீர்மானித்து, அங்கு வசிக்கலானார். அங்கு சங்கரானந்தர், பாரதீதீர்த்தர் போன்ற அறிவாளிகளான துறவிகள் ஆச்ரமங்களில் வசித்து வந்தனர். வித்யாரண்யர் தமது குருவான வித்யாதீர்த்தரென்றும், வித்யா சங்கரர் எனவும் புகழ்பெற்ற ஆசார்யருக்கு, விஜயநகர மன்னரின் பொருளுதவி கொண்டு அழகான கோயில் கட்டினார். இந்த வித்யாசங்கரர் ஆலயமும் சாரதாம்பிகை கோயிலும் சிருங்கேரியை அலங்கரிக்கின்றன.

ஆதிசங்கரரால் துங்கபத்ரா நதிகளின் ஸங்கமத்தில், பாரம்பர்யத் தகவலின்படி, ஸரஸ்வதீ தன் வாக்கின்படி நின்றுவிட்ட இடத்தில், பிரதிஷ்டை, செய்யப்பட்ட சாரதையின் விக்ரஹம் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது. விருபாக்ஷத்தில் (ஹம்பியில்) வித்யாரண்யர் கட்டச் செய்த மடத்திலுள்ள சாரதா விக்ரஹமும், சிருங்கேரியிலுள்ள சாரதா விக்ரஹமும் வீற்றிருக்கும் நிலையிலுள்ளது நோக்கற்பாலது.



## சான்று கூறும் ஆவணங்கள்

சிருங்கேரியில் வித்யாரண்யர் ஒரு மடத்தை ஸ்தாபித்து, அதற்கு விஜயநகர மன்னர்களிடமிருந்து நிலங்களையும், பிற செல்வங்களையும், பிருதுகளையும், கிடைக்கும்படி செய்யக் காரணமாக இருந்தார் என்பது சில சாஸனப் பிரதிகளில் காணக்கிடைக்கும் தகவல். ஈண்டு சில சான்றுகளைக் காண்போமாக :-

1. எபிக்ரா.:.பிகா கர்நாடிகாவின் 6ஆவது ஸம்புடம் (Volume VI) *361-378* பக்கங்களில், ஸம்ஸ்க்ருதத்திலும், கன்னட மொழியிலும் எழுதப்பட்டு, 1652–ஆம் வருஷம் போடப்பட்டு, வித்யாரண்யபுர வாசியான கூடலி சம்பு பட்டரின் வசமிருந்த ஒரு செப்புப் பட்டயத்தின், பனை யோலையில் எழுதப்பட்ட பிரதி ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. அப்பிரதியில், "சங்கர தர்மபீட விஷயமாக விண்ணப்பித்துக்கொண்ட, ஹரிஹரமஹாராயன் ஒரு மடத்தையும், ஓர் அக்ரஹாரத்தையும் நிர்மாணித்து, வித்யாரண்யரின் பாதங்களில் ஸமர்ப்பித்தான்." எனக் கூறப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட கர்நாடகப் பிரதேச சாஸனங்களின் தொகுப்பிற்கு ரைஸ் என்ற ஆங்கிலேயர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள முன்னுரையின் (Introduction–23, 24–ஆம் பக்கங்களில்), ஒரு பகுதியில், "வித்யாரண்யர் விஜயநகர ராஜ்யத்தை நிறுவுவதில் ஹரிஹரனுக்கும், புக்கனுக்கும் உதவினார் ... அவர் சிருங்கேரியில் மடத்தை ஸ்தாபித்து, அதற்கு மான்யங்களைப் பெறுவதிலும். வித்யாரண்யபுரம் அக்ரஹாரத்தை நிறுவியதிலும் ஈடுபட்டார்" என்று காணப்படுகின்றது.

3. சிருங்கேரி மடத்தின், காலத்தால் முந்திய சாஸனம், 1346 (கி. பி.) வருஷத்தியது. இந்த முதல் சாஸனத்தில்கூட சிருங்கேரி ஒரு யாத்ராஸ்தானம் என்று தான் சொல்லப்பட்டுள்ளது. (Vijayanagar City-New Currents of Research பக்கம்-32).

மைஸூர் மஹாராஜாவின் அரண்மனையில் வித்வான்களாக மூன்று தலைமுறைகளில் திகழ்ந்தவருள், மூன்றாம் தலைமுறையினரான மஹாவித்வான் காசி சேஷவேங்கடாசல சாஸ்திரி, 1913ஆம் ஆண்டில், பம்பாய் ஸ்ரீ வேங்கடேச்வர (ஸ்டீம்) அச்சகத்தில் அச்சிடப்பட்டுப் பிரசுரமான, 'சாரீரகமீமாம்ஸா பாஷ்ய'த்திற்கு, முன்னுரை எழுதியுள்ளார். அதில் (40-44 பக்கங்களில்) காஞ்சி காமகோடி பீடம், புஷ்பகிரி மடம், விருபாக்ஷ மடம், சிருங்கேரி மடம், கூடலி மடம், ஆமனி மடம், கரவீர மடம், ஆகிய 7 மடங்களின் ஸ்ரீமுக பிருதாவளிகளும், முத்திரைகளும் அச்சிடப்பட்டுள்ளன. இவற்றுள், புஷ்பகிரி, விருபாக்ஷ, சிருங்கேரி, கூடலி, ஆமனி, கரவீர மடங்களின் முத்திரைகளில் "வித்யாசங்கர" என்ற பெயர் காணப்படுகின்றது. மேலும் மேற்கண்ட ஏழு மடங்களுள், காஞ்சீ, கரவீர, மடங்களைத் தவிர, பிற ஐந்து மடங்களின் பிருதாவளிகளில், 'கர்நாடக ஸிம்ஹாஸன ப்ரதிஷ்டாபனாசார்ய' என்ற ஒரு பிருதும், 'துங்கபத்ரா தீரவாஸ' என்ற மற்றொரு பதமும் காணப்படுகின்றன. 'கர்நாடக ஸிம்ஹாஸன ப்ரதிஷ்டாபனசார்ய' என்பது விஜயநகர ராஜ்யத்தை நிறுவிய வித்யாரண்யரைக் குறிக்கின்றது. மேலே சொல்லப்பட்ட 5 மடங்களுள் விருபாக்ஷத்தில் (ஹம்பியில்) உள்ள மடமும், கூடலியிலுள்ள மடமும் துங்கபத்ரைக் கரையிலுள்ளன. துங்கைக்கரையிலுள்ள சிருங்கேரி மடம், ஆந்திரப் பிரதேசத்திலுள்ள புஷ்பகிரி மடம், ஆமனி மடம் ஆகியவற்றின் மடாதிபதிகளுக்கும், 'துங்கபத்ரா தீரவாஸ' என்ற பிருது, இம்மடங்களின்



ஸ்ரீமுக பிருதாவளிகளில் காணப்படுவதால், இவை துங்கபத்ரையின் கரையில் (கூடலில்), சங்கரர், எதிர்பாராத சூழ்நிலையில், சாரதையைப் பிரதிஷ்டை செய்து, அவ்வம்பிகையின் பூஜைக்காக நியமித்த மடத்துடன் தொடர்புள்ளவைகளாக இருக்கலாம்.

சாரீரக மீமாம்ஸா பாஷ்யத்தின் முன்னுரையில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஸ்ரீமுக பிருதாவளியின் வாசகத்தின் படியே, சிருங்கேரி மடத்தின் ஸ்ரீமுக பிருதாவளி முன்னர் இருந்து வந்துள்ளது. ஆனால் சுமார் 1954-ம் ஆண்டிற்குப் பின்னர், படிப்படியாக சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. இப்பால் 'சங்கராச்சார்ய பரம்பரா ப்ராப்த', 'தக்ஷிணாம்னாய பீட' என்ற பிருதுகள் சேர்க்கப்பட்டுள்ளது நோக்கற்பாலது.

மஹாதேவ் ராஜாராம் போடஸ், மராத்தி மொழியில் 'சங்கராச்சார்யரும் அவருடைய ஸம்பிரதாயமும்' என்ற ஒரு நூலை இயற்றியுள்ளார். (ஜகத் ஹிதேச்சு பிரஸ், பூனா-1923). இதில், 48, 49ஆம் பக்கங்களில், ஆசிரியர் போடஸ் ஒரு பிரச்சினையை எழுப்பியுள்ளார். அதாவது:- "சங்கராச்சார்யார் பாரத நாட்டின் நான்கு எல்லைக் கோடிகளிலும் நான்கு மடங்களை (மூலைக்கொன்றாக), ஏற்படுத்தியதாகக் கூறப்படுகின்றது. ஆத்ய சிருங்கேரி மடமோ, காஞ்சி மடமோ அப்படி மூலைகளில்லை. இவை பாரத பூமியின் உள்நாட்டுப் பகுதியில் உள்ளன. ஆதலால் தெற்குத் திசைக்கான மடம் ராமேச்வரத்தில் அல்லது கன்யாகுமரியில் இருந்திருக்க வேண்டும்".

போடஸ் கூறும் சிருங்கேரி மடம், எதிர்பாராத சூழ்நிலையில், துங்கையும் பத்ரையும் கூடுமிடத்தில் தேவீ ஸரஸ்வதீ நின்றுவிட்ட இடத்தில், சங்கராச்சார்யர், தேவியின் ஸாந்நித்தியத்தை சாரதாம்பிகையாகப் பிரதிஷ்டை செய்து, பூஜித்து, அம்பிகையின் ஆராதனத்திற்காகத் தம் சிஷ்யர் ப்ருத்வீதரரை நியமித்து,

அவருடைய வாஸத்திற்காக ஏற்படுத்திய ஸ்தானம். சாரதாம்பாளின் இடமாகவும் ப்ருத்வீதரர், வித்யாரண்யர் போன்ற மஹான்களின் வாஸஸ்தானமாகவுமிருந்து வந்ததால், தென்மூலையில் இல்லாது போனாலும் இம்மடம் புகழடைந்தது.

## காஞ்சியின் தனிப் பெருமை

காஞ்சி, ஏழு மோக்ஷபுரிகளில் ஒன்று. இது பஞ்ச பூத ஸ்தலங்களில் பிருதிவீஸ்தலம். பிரதானமான சக்தி பீடங்களான மூன்றில் ஒன்றுள்ள க்ஷேத்ரம் காஞ்சி. உலகின் நாபிஸ்தானம் காஞ்சி என காஞ்சீ மஹாத்மியம் கூறுகின்றது. லலிதாதேவியின் த்ரிசதியில், 'காமகோடி நிலயா' என்றுள்ள நாமாவின் பொருளாகப் பிரகாசிக்கும் தேவி, 'காஞ்சியில் வ்யக்தமாகக் காட்சியளிக்கும் காமாக்ஷீ அந்த லலிதா தேவியே' என 'சக்தி மதத்தில்' (Lalita Cult) கூறப்படுகின்றது. தேவீ காமாக்ஷியின் ஸ்தானம் காஞ்சி. இத்தகைய மேன்மை கொண்ட காஞ்சியம்பதியில் தமது இறுதிக்காலத்தைக் கழித்து ஸித்தியடைந்தார் சங்கரர். காஞ்சி மடத்திற்கு, அதில் சங்கரர் தமது கடைசிக் காலத்தில் தங்கியிருந்ததாலும், அது சங்கரர் ஸித்தித்தலத்தில் அமைந்துள்ளதாலும், அதற்கு ஸ்ரீ காமாக்ஷீ தேவியின் ஸம்பந்தத்தாலும் ஏற்றம் ஏற்பட்டது.

ராமேச்வரத்தில் சங்கரர் ஸ்தாபித்த தென்னாட்டிற்கான மடம், காலப்போக்கில் அம்மடத்தின் சக்தி தேவியான காமாக்ஷியும், தேவதையான ஆதிவராஹரரும் கோயில் கொண்டுள்ள தலமாகவும், ராமேச்வரத்திற்கு, பிற சங்கரமடங்களைக் காட்டிலும் அருகாமையிலுள்ள காஞ்சி சங்கரமடத்துடன் இணைந்திருக்க வேண்டும்.

——:o:——



## ஸ்ரீ சங்கராசார்யரும் காஞ்சியும்

காஞ்சிக்குச் சங்கரர் விஜயம் செய்து, நகரத்தை ராஜஸேன மன்னனால் புதுப்பிக்கும்படி செய்தது, ஏகாம்பரநாதர், காமாக்ஷீ, வரதராஜர் ஆகிய பிரதான தேவதைகளின் கோயில்களை அமைத்தது, அந்த நகரில் வசித்து வந்த விவரங்கள் சங்கரரின் சரித்திரத்தைக் கூறும் ஸம்ஸ்க்ருத நூல்களில் காணப்படுகின்றன.

ஸ்ரீ காமாக்ஷியின் ஆலயத்தில் தேவியின் முன், ஸ்ரீ சங்கரர் ஸ்ரீசக்ரப் பிரதிஷ்டை செய்தது மாதவீய சங்கர விஜயம், ஆனந்தகிரி சங்கர விஜயம், சித்விலாஸரின் சங்கர விஜய விலாஸம், சங்கராப்யுதயம் முதலியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்னாட்டில் காஞ்சியில் சங்கரரின் ஸர்வக்ஞபீடாரோஹண வைபவம், சங்கர விஜய விலாஸம், சங்கராப்யுதயம், கோவிந்தநாதரின் சங்கராச்சார்ய சரிதம் ஆகிய நூல்களில் விவரமாகச் சொல்லப்பட்டுள்ளன.



காஞ்சியில் ஸ்ரீ ஏகாம்பரநாதர் கோயிலின் பிராகாரத்திலுள்ள க்ஷேத்ரவ்ருக்ஷமான புராதன மாமரமுள்ள மாவடியிலுள்ள சங்கராசார்யரின் தவக்கோலச் சிற்பம்.

## ஸ்ரீ சங்கரரின் ஸர்வக்ஞபீடாரோஹணம்

' ஸர்வக்ஞ ' என்ற சொல்லிற்கு ' எல்லா அறிவும்
பெற்றவன் ' எனப் பொருள் கூறலாம். அத்தகைய
ஸர்வக்ஞர்கள் அமரக்கூடிய பீடம் ஸர்வக்ஞ பீடம்.
ஸ்ரீ சங்கராச்சார்யர்தான் ஸர்வக்ஞர் எனில் மிகையாகாது.
சங்கரரின் ஜீவ்ய சரித்திரத்தைக் கொண்ட ஐந்து ஸம்ஸ்
க்ருதக் காப்பியங்களில் அவர் ஸர்வக்ஞ பீடமேறியது
கூறப்படுகின்றது. இந்நிகழ்ச்சி காஷ்மீரத்தில் நடை
பெற்றதாக, மாதவர் என்பார் இயற்றிய ' சங்கர திக்
விஜயத்திலும் ', வியாஸாசலரின் ' சங்கர விஜயத்திலும் '
சொல்லப்பட்டுள்ளது. இராஜசூடாமணி தீக்ஷிதரின்
சங்கராப்யுதயத்தில் காஞ்சியில் ஸர்வக்ஞ பீடமேறின
தாகக் கூறப்பட்டுள்ளது. சித்விலாஸ சங்கர விஜயத்தின்,
25-ஆவது அத்தியாயத்தில் 46 முதல் 61 முடிய, 16
செய்யுட்களில், சங்கரரின் ஸர்வக்ஞ பீடாரோஹண
வைபவம் விவரிக்கப்பட்டுள்ளது. இப்படியாக வட
இந்தியாவில் ஒரு புனித இடத்திலும், தென் பாரதத்தில்,
மோக்ஷபுரியான காஞ்சியிலும் சங்கரர் ஸர்வக்ஞ பீடம்
ஏறிய விவரம் தெரிகின்றது.

——:o:——

## காஞ்சியின் மறு பெயர் காஷ்மீரம்

கேரளப் பகுதியைச் சேர்ந்த கோவிந்தநாதர்
இயற்றிய ' சங்கராச்சார்ய சரிதம் ' என்ற சிறு
வரலாற்றின் ஒன்பதாம் அத்தியாயத்தில், முதல் 16
சுலோகங்கள் காஞ்சியில் ஸர்வக்ஞ பீடமேறிய வரலாற்றை
கூறுகின்றது. பின்னர் மறுபடியும், அதே அத்தியா
யத்தில், 77ஆம் செய்யுளில், காஞ்சிபுரத்தையடைந்த
சங்கரர், ஸரஸ்வதியை வென்று. அங்கு ஸர்வக்ஞ பீட
ரோஹணம் செய்து. பின்னர் சீடர்களுடன், விருஷாசலம்
( திருச்சூர்-கோளம் ) எனும் க்ஷேத்திரத்திற்குச் சென்று,



அங்கு இவ்வுலகத்தை விட்டு ஸாயுஜ்யமடைந்தது
சொல்லப்பட்டுள்ளது. கோவிந்தநாதர் ஆசார்யாள்
ஸர்வக்ஞ பீடாரோஹணம் காஞ்சியில் நடந்தேறிய
விவரம் கூறியுள்ளதில், இரண்டு விஷயங்களைக் கூர்ந்து
கவனிக்க வேண்டியுள்ளது. அத்தியாயத்தின் இறுதிப்
பகுதியில் ஆசார்யர்களின் ஸர்வக்ஞ பீடாரோஹணத்
திற்குப் பின் அவரது மறைவு குறிப்பிடுவது ஒன்று.
அத்தியாயத்தின் முதல் சுலோகத்திலும், அடுத்துள்ள
சுலோகத்திலும் " பூமியை ( பாரத நாட்டை ) வலமாக
யாத்திரை செய்து, மறுபடி காஞ்சிபுரத்தை அடைந்தார்.
இக் காஞ்சிபுரம், ஜம்பூத்வீபத்திற்கே பிரகாசத்தை
யளிக்கும் பாரதமண்டலத்தில் காஷ்மீரம் என்ற பெய
ருடனும் புகழடைந்துள்ளது " என்று கூறப்பட்டுள்ளது
இரண்டாம் விஷயம். இதிலிருந்து காஞ்சீபுரத்திற்கு
காஷ்மீரம் என ஒரு மாற்றுப்பெயரும் பண்டைக்காலத்தி
லிருந்திருக்க வேண்டும் என்பதை ஊகித்தறியலாம்.
இப்படி தென்னிந்திய நகரங்கள் சிலவற்றிற்கு வட
இந்திய நகரங்களின் பெயர் சூட்டப்படுவது வழக்கில்
இருந்ததற்குச் சான்றுகள் உள. உதாரணமாகத் தமிழகத்
திலுள்ள தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைமை
யிடமான கடலூர், திருப்பாதிரிப்புலியூர் எனவும்
அழைக்கப்படுகின்றது. திருப்பாதிரிப்புலியூர் தேவாரப்
புகழ்பெற்ற சிவத்தலம். இங்கு கோயில் கொண்டு
விளங்கும் ஈசனுக்குப் பாடலீச்வரர் எனப் பெயர். இக்
கோயிலிலுள்ள சில கல்வெட்டுகளிலும், மற்றும் அருகி
லுள்ள சில ஊர்ச் சிலாசாஸனங்களிலும் இவ்வூரின்
பெயர் ' பாடலிபுரம் ' என்று காணப்படுகின்றது. மகத
ராஜ்யத்தின் பண்டைத் தலைநகர் சரித்திரப் புகழ் பெற்ற
' பாடலீபுத்ரம் ' (பாடலிபுரம்) என்பது அறிந்ததே.
' பாடலிபுரம் ' என்ற பெயர், தென்னாட்டிலுள்ள ஒரு
சிறு பட்டினத்திற்கும் முன்னர் இருந்துள்ளதென்பது
தெளிவாகின்றதல்லவா ?


## ஸ்ரீ சங்கரர் ஸித்தி பெற்ற இடம் காஞ்சீ

சங்கரர் தம் இறுதிக்காலத்தைக் காஞ்சியிலேயே கழித்தார் எனவும், அந்த மோக்ஷபுரியில் நிர்யாணமடைந்தார் எனவும், சிவரஹஸ்யம், (9 ஆம் அம்சம், 16ஆவது அத்யாயம் கடைசி சுலோகம்), மார்கண்டேய ஸம்ஹிதை (கண்டம் 72, பரிஸ்பந்தம்-7, சுலோகம் 11), பதஞ்சலி விஜயம் (VIII-7), சங்கராப்யுதயம் (காப்பியத்தின் முடிவு சுலோகம்), டாக்டர் ஹுல்ட்சின் "துங்கபத்ராதீர வாஸிகளான பாரதீஸம்ப்ரதாய ஆசார்யர்களின் குருபரம்பரை" ஜாபிதா, கூடலீ மடத்தின் குருபரம்பரா நாம மாலா ஆகிய ஸம்ஸ்க்ருத நூல்களில் சொல்லப்பட்டுள்ளது.

நவீன கால பிறமொழிகளில் எழுதப்பட்ட நூல்களுள், பெங்காலி விச்வகோசம் (ஹிந்திப் பதிப்பு) மஹாமஹோபாத்யாய பத்ம விபூஷண் கோபிநாத் கவிராஜ் ஹிந்தியில் இயற்றியுள்ள 'பாரதீய ஸம்ஸ்க்ருதி ஔர் ஸாதனா (முதல் பகுதி, பக்கம் 113), பேல்வால்கரின் கோபால் பாஸு மல்லிக் சொற்பொழிவுகள் (பூனா 1929), முதலியவற்றிலும் சங்கரர் காஞ்சியில் ஸித்தியடைந்ததாகக் கூறப்பட்டுள்ளது.



காஞ்சி கச்சபேச்வரர் கோயிலில் சங்கரர்.



காஞ்சீபுரத்தில் ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையின் ஆலயத் தோற்றம்.

மற்றும் மாதவீய சங்கரவிஜயத்தின் ஸர்கம் 16, 103ஆம் செய்யுளுக்கு, (அக்காவியத்திற்கு எழுதப் பட்டுள்ள "அத்வைத ஸாம்ராஜ்ய லக்ஷ்மீ" என்ற உரையில்) கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தில் 'காஞ்சியில் தமது ஆசிரமத்தில் ஆசார்ய சங்கரர் ஸித்தியடைந்தார்", எனக் கூறும் செய்யுளை முடிவில் கொண்ட, சிவரஹஸ்யம், - ஒன்பதாம் பகுதி, 16ஆம் அத்யாயம் முழுதும் மேற்கோளாக கொடுக்கப்பட்டுள்ளது நோக்கற்பாலது. மேலும் ஸாளக்ராம் ஸ்ரீ கண்ட சாஸ்திரி (ச்ருங்கேரி) மேற்கண்ட சிவரஹஸ்யப்பகுதி முழுவதையும், கன்னட மொழி பெயர்ப்பையும், கர்நாடக சங்கர விஜய விசேஷ ஸஞ்சிகையில் (1935) வெளியிட்டுள்ளார். அதில் காஞ்சியில் தமது ஆசிரமத்தில் சங்கரரின் ஸித்தி சொல்லப்படுகின்றது.

அனந்தானந்தகிரி இயற்றியுள்ள "சங்கர விஜயம்," ஜீவானந்த வித்யாஸாகர் என்பவரால், கல்கத்தாவில் 1881ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டது. அதில் சங்கரா சிதம்பரத்தில் பிறந்ததாகக் கூறப்பட்டுள்ளதென்பது அந்த நூலின் பிற பிரசுரிப்புகளிலும், சுவடிகளிலும் காணப்படும் தகவலுக்கு விரோதமாகயிருப்பினும், அப்பிரசுரத்தில் சங்கரரின் ஸித்தி ஸ்தானம் காஞ்சி எனத்தான் சொல்லப்படுகின்றது. இந்த சங்கரவிஜயம் சென்னைப் பல்கலைக் கழகத்தினால், 1971ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதன் ஏட்டுப் பிரதிகள், பூனா ஆனந்தாச்ரம புத்தகசாலை, கீழ்த்திசை ஆராய்ச்சி நிலையம்-மைஸூர், ராமதாரக மடம்-காசி, தஞ்சாவூர் ஸரஸ்வதி மஹால் நூல் நிலையம், சென்னை 'அடையார்' புத்தக சாலை, சென்னை அரசு சுவடி நூல் நிலையம், ஏஷியாடிக் ஸொஸையிட்டி லைப்ரரி, கல்கத்தா ஸம்ஸ்க்ருதக் கல்லூரி நூல் நிலையம், கல்கத்தா, ஓரியண்டல் இன்ஸ்டிட்யூட், பரோடா, ஸங்கேச்வர

மடத்துப் புத்தகசாலை, ஆக்ஸ்ஃபோர்டிலுள்ள பாட்லியன் புத்தகசாலை, லண்டனிலுள்ள இந்தியா அலுவலகத்தின் ( Indian Office ) நூலகம், ஆகிய நூல் நிலையங்களில் உள்ளன.



காஞ்சி குமரக் கோட்டத்தில் சங்கரர்.

ஆனந்தகிரி சங்கர விஜயத்தின் அச்சிடப்பட்ட பிரதிகளும், மேற்கண்ட எல்லா ஏட்டுப் பிரதிகளும், ஆசார்ய சங்கரர் காஞ்சியில் ஸித்தியடைந்ததாக ஒருமுகமாகச் செப்புகின்றன. இந்த சங்கர விஜயம் "ஆதாரமான நூல்" என்பதை, இந்நூலைப் பற்றி சில குறைபாடுகள் கூறியுள்ள பேராசிரியர் வில்ஸன் ஒத்துக் கொள்கிறார். மேலும் சிருங்கேரி குருவம்ச காவ்யத்தின் ஆசிரியர் சங்கரரின் ஸித்தியைப் பற்றி ஆனந்தகிரியைத் தழுவி எழுதாது போனாலும், தாம் "ஆனந்தகிரி போன்றவர்களைப் பின்பற்றி சங்கரரின் வரலாற்றை எழுதுவதாக" தமது உரையில் கூறியுள்ளார்.

காஞ்சியில் ஸ்ரீ பகவத்பாதாள் ஸித்தியடைந்தார் என்பது காஞ்சி மடத்தில் தொன்றுதொட்டு மாறுபடாது வழக்கிலிருந்து வருவதும், முன்னொரு பகுதியில், குறிப்பிடப்பட்ட சாரீரக மீமாம்ஸா பாஷ்யத்தின்



முன்னுரையில ( 40-ஆம் பக்கம் ) அச்சிடப்பட்டுள்ள முதல் ஸ்ரீமுக பிருதாவளியில், "ஸ்ரீமச்சங்கர பகவத் பாதாசார்யாணாம அதிஷ்டானே ஸிம்ஹாஸனாபிஷிக்த" என்ற பிருததத்தினால் திடப்படுகின்றது.

## காமகோடி பீடம் – சில சான்றுகள்

காஞ்சிபுரத்தில், தமது ஆச்ரமத்தில், சங்கரர் பூவுலகிலிருந்து மறைந்தார் என சிவரஹஸ்ய அத்யாயத்தில் சொல்லப்பட்டுள்ளதிலிருந்து காஞ்சியில் தமது



காஞ்சியில் ஏகாம்ரேசுவரர் கோயிலில் பெரிய நந்தியின் தெற்கேயுள்ள ஒரு தூணில் சங்கரர்,

மடத்திலிருந்தார் என்பது தெளிவு. ஆனந்தகிரி சங்கர விஜயம், மார்க்கண்டேய ஸம்ஹிதையின் சங்கர சரித்திரப் பகுதி, குஹ்ய ஸஹஸ்ரநாமம், பகவத்பாதாப்யுதயம் முதலிய ஸம்ஸ்க்ருத நூல்களில் சங்கரரின் காஞ்சி காமகோடி மடம் சொல்லப்பட்டுள்ளது.



காஞ்சிக்கருகில் செவிலிமேட்டுக் கோயிலில் சங்கரர்.

காஞ்சி சங்கர மடம் பற்றிய தகவல்களுள்ள நூல்கள், மலர்களிலுள்ள கட்டுரைகள், ஆவணங்கள், நீதிமன்ற தீர்ப்புகள், போன்றவைகளில் சிலவற்றின் பெயர்களை மட்டில் கீழே காணலாம்.

1. மஹாமஹோபத்யாய கங்காநாத் ஜா–சிருங்கேரி 'பக்தி குஸுமாஞ்சலியில்' எழுதியுள்ள (**1938**) ஒரு கட்டுரை.

2. மஹாமஹோபாத்யாய என். எஸ். அனந்த கிருஷ்ண சாஸ்திரி மேற்படி 'பக்தி குஸுமாஞ்சலியில்' எழுதியுள்ள ஒரு கட்டுரை.

3. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியின் 'தென் இந்திய சரித்ரம்'



4. ஸூர்யநாராயண சாஸ்திரி (சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர்) – 'சங்கராசார்யர்–தத்வஞானி'

5. மஹாமஹோபாத்யாய, பத்மவிபூஷண் கோபிநாத் கவிராஜ் (பாரதீய ஸம்ஸ்க்ருதி ஔர் ஸாதனா (1, பக்கம் **113**).



காஞ்சி வைகுண்ட பெருமாள் கோயிலில்
தவக்கோலத்தில் சங்கரர்

6. கோடா வேங்கடாசலம் – நேபாள ராஜ வம்சாவளி **1953**.

7. டாக்டர் டி. எஸ். த்ரிவேதா "இந்தியன் க்ரொனாலஜி" (பாரதீய வித்யாபவன், பம்பாய் **1959**).

8. பேராசிரியர் பலதேவ் உபாத்யாய – 'சங்கராசார்ய' (ஹிந்துஸ்தானி அகாடமி **1963** – பக்கம் **191**).

9. ஸாலிக்ராம் ஸ்ரீகண்ட சாஸ்திரி (கர்நாடக விசேஷ ஸஞ்சிகா – **1935**).

ஸ்ரீ காமாக்ஷி அம்மன் கோயிலில்



பங்காரு காமாக்ஷி ஸந்நிதியில் சங்கரர்



உத்ஸவமூர்த்தி ஸந்நிதியில் சங்கரர்

10. சார்லஸ் ஸ்டுவர்ட் குரோல் 'செங்கல்பட்டு ஜில்லா கெஸட்டில்' (1879 பக்கம் 86, 87).

11. ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் – (உலக மதங்கள் – 1942).

12. ஹிந்து மத தர்மஸ்தாபன கமிஷன் அறிக்கை (இந்திய அரசு – 1962).

13. வித்யா பாஸ்கர உதயவீர் சாஸ்திரி 'சங்கரரின் காலம்' – 1981.

14. வில்லியம் ஸென்க்னர், வாஷிங்டன். 'ஆசிரியர்களின் பாரம்பர்யம் – சங்கர' – 1983.

15. சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு – ஸி. எம். பி. எண். 2591 – 1951. (மதராஸ் லா ஜர்னல் – 1952).

16. கல்யாண் பத்திரிகையின் 'தீர்த்தாங்கம்' – 1957.

17. 1928–ஆம் வருடத்திற்கான மைசூர் தொல் பொருள் இலாகாவின் ரிபோர்டில்– 'சிருங்கேரி மடமும் அதன் குருக்களும்' என்ற தலைப்பின் கீழ், குருவம்ச காவ்யத்தின் மூல ஏட்டுப் பிரதியைப் பற்றிய விமர்சம் (ரிபோர்ட் – பக்கம் 16).



## வரதர் கோவில் சிலாசாஸனம்

காஞ்சிமடச் செப்பேடுகளில் ஒன்று விஜயநகர மன்னன் வீரநரஸிம்ஹதேவனதாகும். கி. பி. 1507 இல் காஞ்சி மடத்திற்கு இம்மன்னன் காஞ்சிக்குச் சுமார் ஒன்பது மைல் தூரத்திலுள்ள குடியான்தண்டலம் என்ற கிராமத்தில் நிலமான்யம் விட்டது பற்றியது அச்செப்பேடு. அதில் குடியான் தண்டலம், சுருட்டில் கிராமத்திற்கு மேற்கிலுள்ளதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. காஞ்சி வரதராஜர் கோயிலின் (மலை) மேற்குச் சுவற்றில் ஒரு சிலாசாஸனத்தின் ஒரு பகுதியில், "சுருட்டிலென்று அறியப்படும். சங்கராசார்யபுரம்" என்று காணப்படுவது கவனத்திற்குரியது.



காஞ்சி வரதராஜர் கோவில் அனந்த ஸரஸிற்கு தெற்கு நாற்கால் மண்டபத்தில் சங்கரர்.



ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி கோயிலில் தாயார் ஸந்நிதிக்கு போகும் வழியிலுள்ள மண்டபத்தில் ஸ்ரீ வியாஸரும் சங்கரரும்.

காஞ்சியிலுள்ள முக்கிய சிவ, விஷ்ணு ஆலயங்களிலும், காஞ்சியைச் சுற்றி அருகிலும், தொலைவிலும் உள்ள சில கோயில்களிலும் சங்கராச்சார்ய சிற்பங்கள் காணப்படுகின்றன. காஞ்சி மடத்தில், நித்ய பூஜையிலுள்ள புராதன சங்கரரின் சிலாபிம்பம் இரு பக்கத்திலும் (பக்கத்திற்கு மூன்றாக) ஆறு சீடர்களுடன் விளங்குகின்றது. ஆசார்ய சங்கரருக்கு 'ஷண்மதப் பிரதிஷ்டாபனாசார்யர்' (ஆறு சமயங்களை நிறுவியவர்) என ஒரு புகழ்ப் பெயர். சங்கரர் காஞ்சியில் வஸித்தக்கால், பரமதகாலாநலர், லக்ஷ்மணர், திவாகரர், த்ரிபுராகுமாரர், கிரிஜா குமாரர், வடுகநாதர் என்ற ஆறு சீடர்கள் ஆசார்யாளின் அனுக்ரஹத்துடன், சைவ வைணவ, ஸௌர (ஸூர்ய), சாக்த, காணாபத்ய, காபாலிக (கௌமார) என்ற 6 பக்திமார்கங்களைக் கொண்ட சமயங்களைப் பிரசாரம் செய்ய, புறப்பட்டுச் சென்றனர் என்ற தகவல், ஆனந்தகிரியின் சங்கர விஜயத்தில் 6 அத்தியாயங்களிலும் (67-72), சித்விலாஸரின் சங்கர விஜய விலாஸத்தில் 31ஆம் அத்தியாயத்திலும், மாதவீய சங்கர விஜயத்தில், 15ம் ஸர்கத்தில் இறுதிச் செய்யுளுக்கான டிண்டிம வியாக்யானத்திலும் (பக்கம் 600), சிருங்கேரி குருவம்ச காவ்யத்தின் மூன்றாம் ஸர்க்கம், 36ஆம் சுலோகத்திலும், அதன் விளக்கத்திலும் சொல்லப்பட்டுள்ளது. இப்படி காலத்தாலும், இடத்தாலும், வேறுபட்ட நான்கு நூல்களின் ஆசிரியர்கள் ஒரே தகவலைக் கொடுத்திருப்பது கவனிக்கத் தக்கது.

ஆனந்தகிரி, காஞ்சியில் சங்கரர் ஸ்ரீசக்ரப் பிரதிஷ்டை, யோகலிங்கஸ்தாபனம், மோக்ஷமார்கோபதேசம் செய்தபின் மேற்கண்ட விஷயத்தைத் தெரிவிக்கின்றார். குருவம்ச காவ்யத்தில் இத்தகவலைக் குறிக்கும் செய்யுளிற்கு முந்தியது (III-35), சங்கரர் காஞ்சியில்



காஞ்சி ஸ்ரீ காமகோடி சங்கராசார்ய மடத்தில் பழைய பூஜாக்ருஹத்தில் சிஷ்யர்களுடன் கூடிய ஸ்ரீ சங்கராசார்யமூர்த்தி.




காஞ்சி ஸ்ரீ வரதராஜர் கோயிலுக்கு சுமார் ஒருமைல் தூரத்திலுள்ள சிவாஸ்தானம் சிவன் கோயிலின் கற்பக்ரஹ சுவற்றின் (உள்பக்கத்தில்) கணேசருடன், பார்வதியுடனுமுள்ள ஸ்ரீ பரமேச்வரருக்குத் தண்டவந்தனம் செய்யும் முறையிலுள்ள ஸ்ரீ சங்கராசார்ய சிற்பம்.



காமாக்ஷியைப் பிரதிஷ்டை செய்த விவரத்தைத் தருகிறது. இப்படி இவ்விரு நூல்கள், சங்கர சரித்திரத்தில் ஒரு நிகழ்ச்சிக்கு ஒரே காலத்தைக் குறிப்பிடுவதையும் அத்தகவலுக்கேற்ப, காஞ்சி சங்கர மடத்தின் புராதன பூஜாக்ருஹத்தில், ஆசார்ய பிம்பம், ஆறு சீடர்களின் பிம்பங்கள் சூழ அமைந்துள்ளதையும் நோக்க வேண்டும்.

——:o:——

## கும்பகோணமும் காவிரியும்

சூழ்நிலை காரணமாகக் காஞ்சி சங்கரமடத்தின் ஆசார்யர்கள் சிலர் கும்பகோணத்திலும், பிற சில ஸ்மஸ்தானங்களிலும் வஸிக்க நேர்ந்தது. கும்பகோணம் ஒரு மஹாக்ஷேத்ரம். இதனருகிலுள்ள மத்யார்ஜுனம் எனப்படும் திருவிடைமருதூரில் அத்வைதமே உண்மை என்று ஆசார்யாளுக்கு அசரீரி வாக்கு மூலம் ஈசன் அறிவித்தது, ஆனந்தகிரியின் சங்கரவிஜயத்திலும் (அத்தியாயம்-4), மாதவீய திக்விஜய காவ்யத்தின் டிண்டிம உரையிலும் (பக்கம் 529), சித்விலாஸ சங்கரவிஜயத்திலும் கூறப்பட்டுள்ளது. பாகவதம், (10ஆம் ஸ்கந்தத்தில்) தென் மோக்ஷபுரியான காஞ்சியையும், ஏழு புனித நதிகளில் ஒன்றான காவிரியையும் பிணைத்துக் கூறுகின்ற ஒரு செய்யுள் :- "காமகோடி புரீம் காஞ்சீம் காவேரீம் ச ஸரித்வராம்". ஆதிசங்கரர் காவேரி நதீதீர க்ஷேத்திரங்களுக்கு விஜயம் செய்த விவரம் அறியப்பட்டதே. 1906-ம் ஆண்டில் ஆர்தர் ஹெமிங்வே, ஐ. ஸி. எஸ். தஞ்சாவூர் ஜில்லா கெஸட்டில், கும்பகோணத்தில் ஆதிசங்கரரின் காலத்திலேயே ஒரு மடம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (பக்கம் 208). கும்பகோணத்திற்கு வடக்கே கொள்ளிடம் நதிக்குப் போகும் சாலையில் நீலத்தநல்லூரில், ஆசார்யர்கள் கோடை காலத்தில், ஸ்நானம்

செய்ய கொள்ளிடத்திற்குச் செல்லும்போதும், திரும்பும் போதும் தங்குவதற்காக ஒரு பழைய மண்டபம் உள்ளது. அரசாங்க வருவாய் இலாகா ஆவணங்களில், இம் மண்டபம் (சங்கராசார்யமடம்) எனக்குறிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீரங்கத்தின் அருகிலுள்ள திருவானைக் கோயிலில் வடக்கு வீதியில் உள்ள ஒரு பெரிய மடம் காஞ்சி சங்கர மடத்தைச் சேர்ந்தது. இம்மடத்திற்கு, மதுரை நாயக்க அரசன், விஜய ரங்கநாதனால் திருச்சி ஜில்லாவில், காவேரி தீரத்தில், மஹேந்த்ரமங்கலம், கோபாலஸ்வாமி தோட்டம் போன்ற சில கிராமங்களில் நிலமான்யம் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலங்கள் இன்றும் காஞ்சி மடத்தின் அனுபவத்திலுள்ளன. இந்த மான்யங்களைக் குறிக்கும் 1708ம் ஆண்டு தாமிர சாஸனத்தில் 'காஞ்சிபுர லோககுரு சங்கராச்சார்ய' என்று காணப்படுகின்றது.

காஞ்சீ மடாதிபர்கள், சில காலம், கும்பகோணத்தில் வஸித்து வந்தபோதிலும், நீண்ட யாத்திரை செய்தனர் எனவும் அவர்கள் 'காமகோடி பீட சங்கரச்சார்யர்' என்றே அழைக்கப்பட்டு வந்தனர் எனவும், அவர்கள் கிருஷ்ணா நதிக்கரை முதல் நாட்டின் தென்கோடி வரை யாத்திரை செய்து வந்தனர் எனவும், அம்மடத்தின் பரிவாரங்கள் அதிகமாகவே இருந்தன எனவும் கிழக்கிந்தியக் கம்பெனியார் காஞ்சி மடத்திற்கு 18, ஏப்ரல் 1792 தேதி கொண்ட உத்தரவினாலும் 23 நவம்பர் 1792 தேதியிடப்பட்ட கர்நாடக நவாபின் உத்தர வினாலும் விளங்குகின்றன.

— —: o :——

मठीयश्रीमुखबिरुदावलीभेदाः—

श्रीकाञ्चीकामकोटिपीठाधिपानाम्—चन्द्रमौलीश्वर ।

श्रीः
चन्द्रमौलीश्वरायनमः
श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य-
श्रीमच्छंकरभगवत्पादप्रतिष्ठितश्रीका-
मकोटिपीठाधिपश्रीमहादेवेन्द्रसरस्व
तीसंयमीन्द्रो विजयते ।

"स्वस्ति श्रीमदखिलभूमण्डलालङ्कारत्रयस्त्रिंशत्कोटिदेवतासेवित श्रीकामाक्षीदेवीसनाथ श्रीमदेकाम्रनाथ श्रीमहादेवीसनाथ श्रीहस्तिगिरिनाथ साक्षात्कारपरमाधिष्ठानसत्यव्रतनामाङ्कित काञ्चीदिव्यक्षेत्रे शारदामठसुस्थितानामतुलितसुधारसमाधुर्य कमलासनकामिनी धम्मिल्लसंफुल्लमल्लिकामालिका निष्यन्दमकरन्दझरीसौवस्तिकवाङ्निगुम्भविजृम्भणानन्दतुन्दिलितमनीषिमण्डलानामनवरताद्वैतविद्याविनोदरसिकानां निरन्तरालंकृतीकृतशान्तिदान्तिभूम्नां सकलभुवनचक्रप्रतिष्ठापकश्रीचक्रप्रतिष्ठाविख्यातयशोलंकृतानां निखिलपाषण्डकण्टकोद्घाटनेन विशदीकृतवेदवेदान्तमार्गषण्मतप्रतिष्ठापकाचार्याणां श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य श्रीमच्छङ्करभगवत्पादाचार्याणामधिष्ठाने सिंहासनाभिषिक्त श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वतीसंयमीन्द्राणामन्तेवासिवर्य श्रीमन्महादेवेन्द्रसरस्वती श्रीपादैः"

1. ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடாதிபர்களின்
ஸ்ரீமுக முத்ரை - பிருதாவளி

(அ) வட்டவடிவ முத்ரையிலுள்ள சொற்கள் :-
"ஸ்ரீசந்த்ரமௌளீச்வராய நம :
ஸ்ரீமத்பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமச்சங்கரபகவத்பாத ப்ரதிஷ்டாபித ஸ்ரீ காமகோடி பீடாதிபாளும்............"

(ஆ) ஸ்ரீமுக பிருதுகளில் முக்யமான சிலவற்றின் பொருள் :-
இப்புவியகைத்திற்கும் அணியாகவும், ஸ்ரீ காமாக்ஷிதேவியுடன் கூடிய ஸ்ரீ ஏகாம்ரநாதரும், ஸ்ரீமஹாதேவியுடனுள்ள ஸ்ரீ வரதராஜரும் கோயில் கொண்டுள்ளதுமான, ஸத்யவ்ரதக்ஷேத்ரமெனும், காஞ்சி திவ்யத்தலத்தில், ஸ்ரீசக்ரத்தை யமைத்துப் புகழெய்திய, வேதாந்தத்தையும், அறு சமயப் பாதைகளையும் நிலைகாட்டிய, ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யரின் அதிஷ்டானத்தில், சிங்காதனத்தில் அபிஷேகம் செய்விக்கப் பட்ட......................."

पुष्पगिरिमठाधिपानाम्—

(पादहीनांगुलद्वयसमचतुरश्रमुद्रा)—श्रीविद्याशङ्कर ।

श्रीशृङ्गगिरिश्रीविरूपाक्ष-
श्रीपुष्पगिरिश्रीआलम्पुरि-
श्रीविद्याशङ्करकरकमल-
सञ्जातश्रीविद्यानृसिंह-
भारतीस्वामिनः

" (श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य पदवाक्यप्रमाण पारावारपारीणयमनियमासनप्राणायामप्रत्याहारध्यानधारण समाध्यष्टाङ्गयोगानुष्ठान निष्ठागरिष्ठतपश्चक्रवर्त्यनाद्यविच्छिन्नगुरुपरम्पराप्राप्त सम्प्रदायकषड्दर्शनस्थापनाचार्य व्याख्यानसिंहासनाधीश्वर सकलवेदार्थप्रकाशकसांख्यत्रयीप्रतिपालकसकलनिगमागमसारहृदयवैदिकमार्गप्रवर्तक सर्वतन्त्रस्वतन्त्रादिराजधानीविद्यानगरमहाराजधानी कर्नाटकसिंहासनप्रतिष्ठापनाचार्य श्रीमद्राजाधिराज महाराजगुरुभूमण्डलाचार्य तुङ्गभद्रातीरवासऋष्यशृङ्गगिरि पुरवराधीश्वर) श्रीशृङ्गगिरि विरूपाक्ष श्रीपुष्पगिरि पिनाकिनीतीरवास श्रीशैलश्रीआलम्पुर्यादि समस्तपीठाधीश्वर श्रीमदभिनवोद्दण्डविद्यानृसिंहभारतीगुरुपादपद्माराधक श्रीमदभिनवोद्दण्डविद्याशङ्करभारतीकरकमलसंजात श्रीमदभिनवोद्दण्ड विद्यानृसिंहभारतीस्वामिनः "

2. புஷ்பகிரி மடாதிபர்களின் ஸ்ரீமுக முத்ரை பிருதாவளி

"ஸ்ரீ வித்யா சங்கர"

(அ) சதுரமான முத்ரையிலுள்ள சொற்கள் :-
ஸ்ரீ ச்ருங்ககிரி ஸ்ரீ விரூபாக்ஷ ஸ்ரீ ஆலம்புரி ஸ்ரீ வித்யாசங்கர கரகமல ஸஞ்ஜாத....................."

(ஆ) ஸ்ரீமுக பிருதுகளில் சிலவற்றின் பொருள் :-
"வ்யாக்யான ஸிம்ஹாஸனத்தின் அதிபரும், கர்ணாடக ஸிம்ஹாஸனத்தை நிறுவிய, துங்கபத்ராதீரவாஸியான, ச்ருங்ககிரி, விரூபாக்ஷ, புஷ்பகிரி, ஸ்ரீசைல, ஆலம்புரி முதலிய எல்லா பீடங்களின் அதிபதியான....................."

विरूपाक्षमठाधिपानाम्—

(सार्धांगुलद्वयसवर्तुलाकारपुष्पमुद्रा)—श्रीविद्याशंकर ।




"श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य पदवाक्यप्रमाणपारावारपारीणयमनियमासन प्राणायामप्रत्याहार ध्यानधारणासमाध्यष्टाङ्गयोगानुष्ठाननिष्ठागरिष्ठ तपश्चक्रवर्त्यनाद्यविच्छिन्न गुरुपरंपराप्राप्तषड्दर्शनस्थापनाचार्य व्याख्यानसिंहासनाधीश्वरसकलवेदार्थप्रकाशकसांख्यत्रयीप्रतिपालक सकलनिगमागमसारहृदयवैदिकमार्गप्रवर्तकसर्वतन्त्रास्वतन्त्रादिराजधानी विद्यानगरमहाराजधानी कर्नाटकसिंहासनप्रतिष्ठापनाचार्य श्रीमद्राजाधिराज महाराजगुरुभूमण्डलाचार्य तुङ्गभद्रातीरवास ऋष्यशृङ्गगिरिपुरवराधीश्वर श्रीशृङ्गगिरिविरूपाक्ष श्रीविद्याशङ्करदेवदिव्यश्रीपादपद्माराधकश्रीमदभिनवशङ्करभारतीस्वामि करकमलसंजात श्रीमदभिनवोद्दण्ड नृसिंहभारतीस्वामिभिः " ।।

3. விருபாக்ஷ மடாதிபர்களின் ஸ்ரீமுக முத்ரை – பிருதாவளி

(அ) வட்டத்துள் வட்டமான புஷ்பமுத்ரையிலுள்ள சொற்கள் :-
ஸ்ரீ விரூபாக்ஷ ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமீ
ஸ்ரீவித்யா சங்கர மஹீபாலமுத்ரா

(ஆ) பிருதங்களில் முக்ய சிலவற்றின் பொருள் :-
"வ்யாக்யான ஸிம்ஹாஸனாதிபரும் கர்நாடக ஸிம்ஹாஸனத்தை நிறுவிய, துங்கபத்ராதீரவாஸியான ச்ருங்ககிரி விரூபாக்ஷ ஸ்ரீ வித்யாசங்கர தேவரின் பாதத்தாமரைகளை ஆராதிப்பவருமான....................."

शृङ्गगिरि (शृङ्गेरी) मठाधिपानाम्—(वर्तुलांगुलद्वयसनक्षत्रमुद्रा)

॥ श्री ॥




"श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य पदवाक्यप्रमाणपारावारपारीण यमनियमासनप्राणायामप्रत्याहारध्यानधारणा समाध्यष्टाङ्गयोगानुष्ठाननिष्ठतपश्चक्रवर्त्यनाद्यविच्छिन्न गुरुपरम्पराप्राप्त षड्दर्शनस्थापनाचार्य व्याख्यान सिंहासनाधीश्वरसकलनिगमागमसारहृदयसांख्यत्रयी प्रतिपादकवैदिकमार्गप्रवर्तक सर्वतन्त्रस्वतन्त्रादिराजधानीकर्नाटकसिंहासन प्रतिष्ठापनाचार्य श्रीमद्राजाधिराज गुरुभूमण्डलाचार्यऋष्यशृङ्गपुरवराधीश्वर तुङ्गभद्रातीरवास श्रीमद्विद्याशङ्करपादपद्माराधक श्रीमदभिनवसच्चिदानन्दभारतीस्वामि करकमलसंजात श्रीशृङ्गेरी श्रीनृसिंहभारतीस्वामिभिः" ॥

## (4) ச்ருங்ககிரி (ச்ருங்கேரி) மடாதிபர்களின் ஸ்ரீமுக முத்ரை - பிருதாவளி

(அ) வட்டத்துள் வட்டமாகவுள்ள நக்ஷத்ர முத்ரையினுள் காணப்படுவது:- "ஸ்ரீ வித்யாசங்கர".

(ஆ) பிருதங்களில் சில முக்யமானவற்றின் பொருள் :-
'வ்யாக்யான ஸிம்ஹாஸனாதிபரும், கர்நாடக ஸிம்ஹாஸனத்தை நிறுவியவரும், துங்கபத்ராதீரவாஸியான, ஸ்ரீ வித்யா சங்கர பாதபத்மங்களை ஆராதிப்பவருமான......".

குறிப்பு ;— இம்மடத்தின் ஸ்ரீமுகபிருதாவளிகளில், 1954ஆம் ஆண்டிற்குப்பின், "சங்கராசார்ய பரம்பராப்ராப்த", 'தக்ஷிணஸ்யாம்திசி', 'திக்ஷிணாம்னாய பீட' ஆகிய பிருதுகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன).

कूडली (लगी) मठाधिपानाम्—

(वर्तुलाधांगुलद्वयसमुद्रा)




"(श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य पदवाक्यप्रमाणपारावारपारीण यमनियमासनप्राणायामप्रत्याहारध्यानधारणसमाध्यष्टाङ्गयोगानुष्ठाननिष्ठागरिष्ठतपश्चक्रवर्त्यनाद्यविच्छिन्न गुरुपरम्पराप्राप्त षड्दर्शनस्थापनाचार्य व्याख्यानसिंहासनाधीश्वरसकलवेदार्थप्रकाशकसाङ्ख्यत्रयीप्रतिपालक सकलनिगमागमसारहृदयवैदिकमार्गप्रवर्तकसर्वतन्त्रस्वतन्त्रादि राजधानी विद्यानगरमहाराजधानी कर्नाटकसिंहासनप्रतिष्ठापनाचार्य श्रीमद्राजाधिराज गुरुभूमण्डलचार्य तुङ्गभद्रातीरवास ऋष्यशृङ्गपुरवराधीश्वर) श्रीशृङ्गेरी (कूडली) श्रीविद्याशङ्करदेवदिव्य श्रीपादपद्माराधक शृङ्गेरी श्रीनृसिंहभारतीस्वामि करकमलसञ्जातशृङ्गेरी श्रीशङ्करभारतीस्वामिभिः" ॥

## (5) கூடலீ மடாதிபர்களின் ஸ்ரீமுக முத்ரை - பிருதாவளி

(அ) வட்டத்துள் வட்டமாகவுள்ள முத்ரையினுள் காணப்படுவது :- "ஸ்ரீ வித்யாசங்கர"

(ஆ) பிருதங்களில் சில முக்யமானவற்றின் பொருள்:-
"வ்யாக்யான ஸிம்ஹாஸனாதிபரும், கர்நாடக ஸிம்ஹாஸனத்தை நிறுவியவரும், துங்கபத்ராதீரவாஸியும், ச்ருங்கேரி (கூடலீ) ஸ்ரீ வித்யாசங்கரதேவரின் பாதபத்மங்களை ஆராதிப்பவருமான......"

आमनिमठाधिपानाम्—

(अर्धांगुलद्वयसचतुरश्रमुद्रा)—श्रीविद्याशङ्कर।

श्री
विद्याशंकर,

" (श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य पदवाक्यप्रमाणपारावारपारीण यमनियमासन प्राणायामप्रत्याहारध्यानधारणसमाध्यष्टांग योगानुष्ठाननिष्ठागरिष्ठतपश्चक्रवर्त्यनाद्यविच्छिन्न गुरुपरम्पराप्राप्त षड्दर्शनस्थापनाचार्य व्याख्यानसिंहासनाधीश्वर-सकलवेदार्थप्रकाशकसाङ्ख्यत्रयीप्रतिपालक सकलनिगमागमसारहृदय वैदिकमार्ग-प्रवर्तकसर्वतन्त्रस्वतन्त्रादि राजधानीविद्यानगरमहाराजधानी कर्नाटकसिंहासनप्रतिष्ठापनाचार्य श्रीमद्राजाधिराजगुरुभूमण्डलाचार्य तुंगभद्रातीरवास ऋष्यशृङ्गपुरवराधीश्वर) श्रीशृङ्गेरी श्रीविद्याशङ्करदेवदिव्य श्रीपादपद्माराधक श्रीशृङ्गेरी श्रीविद्यारण्य-भारतीस्वामिनां करकमलसंजात श्रीशृङ्गेरी श्रीमदभिनवोद्दण्ड विद्यारण्यभारती-स्वामिभिः " ।।

## (6) ஆமனி மடாதிபர்களின் ஸ்ரீமுக முத்ரை - பிருதாவளி

(அ) சதுரமாகவுள்ள முத்ரையினுள் காணப்படுவது :-

"ஸ்ரீ வித்யாசங்கர"

(ஆ) பிருதங்களில் சில முக்யமானவற்றின் பொருள்:—

"வ்யாக்யான ஸிம்ஹாஸனாதிபரும், கர்நாடக ஸிம்ஹாஸனத்தை நிறுவியவரும், துங்கபத்ராதீரவாஸியும், ச்ருங்கேரி ஸ்ரீ வித்யாசங்கரதேவரின் பாதகமலங்களை ஆராதிப்பவருமான......"



अनेकशक्तिसंघट्ट-
प्रकाशलहरीघनः ।
ध्वान्तध्वंसोविजयते
विद्याशङ्करभारती ॥

"स्वस्ति श्रीमत्समस्तसुरबृन्दपूजित पादारविन्द शिवप्रतिबिम्बवर्य श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य पदवाक्यप्रमाण पारावारपारीण यमनियमासनप्राणायाम-प्रत्याहार ध्यानधारणा समाध्यष्टाङ्ग योगानुष्ठाननिष्ठ तपश्चक्रवर्त्यनाद्यविच्छिन्न-गुरुपरम्पराप्राप्त षड्दर्शनसंस्थापनाचार्य व्याख्यानसिंहासनाधीश्वर सकलनिगमागम-सारहृदयसांख्यत्रय प्रतिपादक सकलनास्तिकमतोच्छेदपूर्वक सकलधर्मसंस्थापनैकधुरीण-वैदिकमार्गप्रवर्तक सर्वतन्त्रस्वतन्त्र श्रीमहाराजधानी ऋष्यशृङ्गपुरवराधीश श्रीमद्राजाधिराज गुरुभूमण्डलाचार्य श्रीमच्छङ्कराचार्यान्वय संजाताभिनव पञ्चगङ्गातीर-वास कमलानिकेतनकरवीरसिंहासनाधीश्वर श्री (सच्चिदानन्द) विद्यानृसिंहभारती-करकमल किञ्जल्कोद्भव श्रीमदभिनव (सच्चिदानन्द) विद्याशंकरभारतीस्वामिभिः" ।।

## (7) கரவீர மடாதிபர்களின் ஸ்ரீமுக முத்ரை – பிருதாவளி

(அ) வட்டவளயமான முத்திரையினுள் காணப்படுவது :-

"அநேகசக்திஸம்கட்டப்ரகாச லஹரீகன ;
த்வாந்தத்வம்ஸோ விஜயதே வித்யாசங்கரபாரதீ |"

(ஆ) பிருதங்களில் சில முக்யமானவற்றின் பொருள்:—

"வ்யாக்யான ஸிம்ஹாஸனாதிபரும், பஞ்சகங்கைதீரவாஸியும், கரவீர ஸிம்ஹாஸனாதிபதியான......"

---

குறிப்பு :- (அ) 2 முதல் 6 முடியவுள்ள ஐந்து மடங்களின் பிருதங்களில் 'கர்நாடக ஸிம்ஹாஸனத்தை நிறுவிய' என்பது ஸ்ரீவித்யாரண்யரைக் குறிக்கின்றது.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட ஐந்து மடங்களின் பிருதங்களில் 'துங்கபத்ரா தீரவாஸி' என ஒரு அடைமொழி இருப்பினும், இவைகளில் கூடலி, விரூபாக்ஷ மடங்கள் மட்டுமே துங்கபத்ரா நதியின் கரையிலுள்ளன என்பது நோக்கப்பாலது.

## ॥ தோடகாஷ்டகம் ॥

விதிதாகில சாஸ்த்ர ஸுதா ஜலதே
மஹிதோபநிஷத் கதிதார்த்தநிதே
ஹ்ருதயே கலயே விமலம் சரணம்
பவ சங்கரதேசிக மே சரணம். 1

கருணாவருணாலய பாலய மாம்
பவஸாகர துக்க விதூநஹ்ருதம்.
ரசயாகிலதர்சன தத்வவிதம்
பவ சங்கரதேசிக மே சரணம். 2

பவதா ஜனதா ஸுஹிதா பவிதா
நிஜபோதவிசாரண சாருமதே!
கலயேச்வர ஜீவவிவேகவிதம்
பவ சங்கரதேசிக மே சரணம். 3


பவ ஏவ பவானிதி மே நிதராம்
ஸமஜாயத சேதஸி கௌதுகிதா
மம வாரய மோஹமஹாஜலதிம்
பவ சங்கரதேசிக மே சரணம். 4

ஸுக்ருதேऽதிக்ருதே பஹுதா பவதோ
பவிதா ஸமதர்சன லாலஸதா
அதிதீனமிமம் பரிபாலய மாம்
பவ சங்கரதேசிக மே சரணம். 5

ஜகதீமவிதும் கலிதாக்ருதயோ
விசரந்தி மஹாமஹஸச்சலத:
அஹிமாம்சுரிவாத்ர விபாஸி குரோ
பவ சங்கரதேசிக மே சரணம். 6

குரு புங்கவ! புங்கவகேதன! தே
ஸமதாமயதாம் நஹி கோऽபி ஸுதீ:
சரணாகத வத்ஸல தத்வநிதே
பவ சங்கரதேசிக மே சரணம். 7

விதிதா ந மயா விசதைககலா
நச கிஞ்சன காஞ்சனமஸ்தி குரோ
த்ருதமேவ விதேஹி க்ருபாம் ஸஹஜாம்
பவ சங்கரதேசிக மே சரணம். 8



ஸ்ரீரங்கத்தில ஸ்ரீரங்கநாத ஸ்வாமியின் ஆலயத்தில், சந்த்ரபுஷ்கரிணி குளத்தின் படிக்கட்டுகளின் வடபுரமுள்ள சுவற்றில் காணப்படும் ஸ்ரீரங்கநாதர் (உத்ஸவமூர்த்தி) சிற்பமும், அதன் பக்கத்திலுள்ள ஸ்ரீசங்கராசார்யரின் சிற்பமும்.

உ

ஸ்ரீ ஆதிசங்கரரின்

குரு ஸ்தோத்திர மாலை வாங்கி படித்து

பயனடைய வேண்டுகிறோம்.

— ஸ்ரீராமபாதர்னர்க